441

குண்டூசி

நவம்பர் எட்டு அணா

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R. S. மணி
பி. யு. சின்னப்பா
டி. பாலசுப்ரமண்யம்
கே. ஆர். ராமசாமி
வி. எஸ். ஜெயராமன்
என். எஸ். கிருஷ்ணன்
புளிமூட்டை
டி. ஆர். ராஜகுமாரி
எஸ். பி. எல். தனலக்ஷ்மி
பி. ஏ. பெரியநாயகி
ஏ. ஆர். சகுந்தலா
டி. ஏ. மதுரம்
வி. டி. ராஜகாந்தம்
ஸ்டுடியோ : நியூடோன்
கிருஷ்ண பிக்சர்ஸ்
சென்னை. 17.
நவீன்

எமது அன்பர்கள் அனைவருக்கும்

தீபாவளி வாழ்த்துக்கள் !

ஹரிதாஸ்

கீழ்க்கண்ட ஊர்களில் வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது :—

ரத்னா டாக்கீஸ்	...	பாண்டிச்சேரி
ராஜேந்திரா டாக்கீஸ்	...	ஆனைமலை
இந்திரா டாக்கீஸ்	...	மணப்பாறை
சரஸ்வதி டாக்கீஸ்	...	தேவகோட்டை
ஜானகிராம் டாக்கீஸ்	...	மேல மாம்பலம்
ராமஸ்வாமி தியேட்டர்	...	கோவில்பட்டி
சாரதா சினிமா	...	அதிராம்பட்டணம்
லக்ஷ்மண் டாக்கீஸ்	...	எர்ணாகுளம்
கல்யாணை டாக்கீஸ்	...	பொன்னானி
ஸ்ரீ காளீஸ்வரி டாக்கீஸ்	...	ரெங்கனூர்
லக்ஷ்மி டாக்கீஸ்	...	தேனி

கஞ்சன்

ராயல் டாக்கீஸ்	...	திருநெல்வேலி

ராஜகுமாரி

ரஹிம் டாக்கீஸ்	...	பெரியகுளம்
ஜோதி டாக்கீஸ்	...	திண்டுக்கல்
கிருஷ்ணா டாக்கீஸ்	...	அம்பாசமுத்திரம்
மீனாக்ஷி டாக்கீஸ்	...	பரமக்குடி
வலம்புரி டாக்கீஸ்	...	பொன்னமராவதி
ஸ்ரீ பிரஹதாம்பாள் டாக்கீஸ்	...	புதுக்கோட்டை

சாவித்திரி

கிருஷ்ணா டாக்கீஸ்	...	வட பரூர்
ஸ்வாமி டூரிங் டாக்கீஸ்	...	உளுந்தூர்பேட்டை

சகுந்தலை

சுப்ரமணியா டாக்கீஸ்	...	பிரவம்
ஸ்ரீ குஹா டூரிங் டாக்கீஸ்	...	திருத்துறைப்பூண்டி

ஸ்ரீ முருகன்

ஸ்ரீ மீனாக்ஷி டூரிங் டாக்கீஸ்	...	சிங்கம்புணரி

தயாராகிறது **சுதர்சன்** கோராகும்பர் கதையைத் தழுவியது

ராயல் டாக்கி டிஸ்டிரிப்யூட்டர்ஸ்,

120, தெற்கு மாசி வீதி, மதுரை.

"குண்டூசி"

மாஸ சினிமாப் பத்திரிகை

சந்தா விவரங்கள்

உள் நாடு :

வருஷ சந்தா	ரூ.	6
ஆறு மாத சந்தா	ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை :

வருஷ சந்தா	ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு :

வருஷ சந்தா	ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

முன் பக்க அட்டை	ரூ.	450
கடைசிப் பக்க அட்டை	ரூ.	250
2 & 3-ம் பக்க அட்டை	ரூ.	150
சாதாரண ஒரு பக்கம்	ரூ.	75
சாதாரண அரைப் பக்கம்	ரூ.	40
சாதாரண $\frac{1}{3}$ பக்கம்	ரூ.	30

கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், உங்கள் ஊர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், கட்டுரை, கதைகள், "குண்டூசி"யைப்பற்றிய உங்கள் அபிப்பிராயங்கள் இவையெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளைக் காகிதத்தின் ஒரே பக்கத்தில், மையினால் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

காரியாலயம் :
246, தம்பு செட்டி தெரு,
சென்னை 1.

இந்த ஊசியில்

வந்தனம்	... ...	9
உள்ளது உள்ளபடி 'ஜடாயு'	...	1(
தமிழ் ஸினேரியோ ச. து. சு. யோகி	...	12
ஒட்டுக் கேட்டவை —சித்திரம்	...	15
டி. பிரேமாவதி —மூவர்ணப் படம்	...	17
நடனகுமாரி கமலா 'குண்டூசி'	...	19
'குண்டூசி'யைக் கேளுங்கள்		2:
செய்திப் படங்கள்	...	:
நுனிப் புல்...'வெட்டுக்கிளி'		:
தீபாவளிப் படங்கள்	...	42
முதலாளி நடிகன் வி. எஸ். வெங்கடேசன்	...	44
பொதுஜனம் பேசுகிறர்	...	49
எம். எஸ். சரோஜினி —மூவர்ணப் படம்	...	52
இது செய்தி	...	53
வரப்பெற்றேம்	...	56
ஹாஸ்யச் சித்திரம்	...	57
பிரம்மலோகம்	...	58
நாடகக் கம்பெனிகளின் நிலைமை	...	63
குண்டூசி டைரி	...	68

அட்டைப்படம் :

கே. ஜி. புரொடக்ஷன்ஸார் பம்பாயில் தயாரித்து வரும் "இது நிஜமா" படத்தில் கதாநாயகியாகத் தோன்றும் புது நடிகை சரோஜினி.

உங்கள் மனதிற்குகந்த எல்லாவித ஜவுளி ரகங்களையும்
தேர்ந்தெடுக்க சகல சௌகரியங்களுடன் கூடியதும்

★

பலவித நாகரீக பட்டு, பனாரஸ், புடவை
தினுசுகளுக்கும், மில், கைத்தறி ஜவுளிகளுக்
கும் பெயர் பெற்ற இடம்.

நீல மாளிகை

K. S. பெருமாள் முதலியார் & சன்,

3/4, தெற்கு சித்திரை வீதி, :: மதுரை.

அழகுக்கு அழகு செய்பவை
ஆபரணங்களே !

உயர்தரமான, புதுமாதிரியான, நம்பக
மான, எல்லாவித பொன், வைர நகை
களுக்கும் பிரசித்தி பெற்ற நகைக்
கடை

●

எம். அங்கப்ப செட்டியார்,

ஈஸ்வரன் கோயில் தெரு,

திருப்பூர்.

தீபாவளி
வெளியீடு



பக்ஷிராஜாவின்

கன்னிகா

டைரக்ஷன்-ஸ்ரீராமுலு நாயுடு

ஸரோஜினி, கிருஷ்ணன், மதுரம்,
வரதன் B. Sc., ஸந்தானலக்ஷ்மி, ஹரிணி,
காளி என். ரத்னம், ஹேமமாலினி, லலிதா,
பாலசுப்ரமணியம், பத்மினி நடித்தது.

NARAYANAN Co Release

மனமார்ந்த எமது தீபாவளி! வாழ்த்துக்கள்

ஹமீதியா ஸ்டோர்ஸ்

நாகரீக ஜவுளி வியாபாரிகள்

22 கீழ சித்திரை வீதி, மதுரை.

எம் அபிமானிகள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

V. N. கோபால் & Bros.

தங்கப் பதக்கங்கள் பரிசு பெற்ற வாசனாதி வியாபாரிகள்,

10-233, சைனா பஸார், சென்னை.

பிராஞ்சு :

கொத்தவால் பஸார், சென்னை.

(கன்னிகா பரமேஸ்வரி அம்மன் சன்னதிக்கு சமீபம்)

சிறந்த வாட்ச் 'ரிப்பேர்'கள்

ரிஸ்ட் வாட்சுகள், கடியாரங்கள், டைம்பீஸ்கள், பிளாஸ்டிக் ஸ்டிராப்புகள், மூக்குக் கண்ணாடிகள், பௌண்டன் பேனாக்கள் மற்றும் எல்லா நூதன சாமான்களும் கிடைக்கும்

கரீம் வாட்ச் கம்பெனி

53, உஸ்மான் ரோடு, தி. நகர்,

சென்னை 17.

கலை வளர்க! கலைஞர்கள் வாழ்க!

கலைஞன் முரளீதரன்
வில்லன் சர்வாதிகாரி
பத்தினிப் பெண் மாலதி
கர்வி காஞ்சனை
மன்னன் மகேந்திரன்

இத்தனைபேர் வாழ்விலும் புயல் வீசுகிறது.

புயலுக்குப்பின்?

(ஒரு கற்பனைச் சித்திரம்)

கதை, வசனம், பாடல்: "கர்மயோகி"

நாடகப் புரவலர் நாடகக் கலாமணி,
வைரம் அருணாசலம் செட்டியாரவர்களின்
பூரண உரிமை பெற்ற நாடகம்.

ஸ்ரீ ராம பால கான வினோத சபையார்

சென்னை மவுண்ட் ரோட்

S. V. S. நியூ தியேட்டரில்

11-11-47 முதல் தினசரி நாடகம் நடைபெறுகிறது

தினசரி மாலை 6-15க்கும், வியாழன் மட்டும் இரவு 9-15க்கும்

திங்கள் தோறும் விடுமுறை

டிக்கெட்டு விபரம்: 3-8-0, 2-12-0, 1-10-0, 1-3-0, 0-10-0.

முதல் மூன்று வகுப்புகளுக்கு மட்டும் ஒரு வாரம்
முன்னதாகவே ரிசர்வ் செய்யப்படும். ரிசர்வ் சார்ஜ்
ஸீட் ஒன்றுக்கு நான்கு அணா.

பட்டை 1
ஊசி 2

குண்டூசி

நவம்பர்
1947

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

வந்தனம்

தமிழ் நாடு டாக்கீஸ் எஸ். செளந்தர ராஜன் கைராசிக்காரர் என்பது சினிமா உலகறிந்த விஷயம். அதன் காரணமாக நம் பத்திரிகையின் முதல் பிரதியை நானே எடுத்துக் கொண்டு போய் அவரிடம் விற்றேன். இப்பொழுதோ அவரது கைராசிக்கு "குண்டுசி"யே நல்ல உதாரணமாகி விட்டது.

"குண்டுசி" பிரமாதமான பத்திரிகையாகி விட்டால் அப் "பழி"யை நேயர்கள் மீது சுமத்தி விடப் போவதாக சென்ற ஊசியில் எழுதி யிருந்தேன். இந்தப் "பழி"க்காக தாங்கள் பயப்படப் போவதில்லை யென்று நேயர்கள் செய்கை மூலம் தெரிவித்து விட்டனர். ஏராளமான பிரதிகளை வெளியிட்டிருந்தும், அவ்வளவும் நான்கே தினங்களுக்குள் விற்பனையாகி விட்டன. இந்த இரண்டாவது ஊசியையே ஆயிரக் கணக்கில் அதிகமாய் அச்சிடும்படி அவர்கள் செய்து விட்டனர். தென்னாட்டில் வேறு எந்த சினிமாப் பத்திரிகைக்குமே வாசகர்கள் இத்தகைய வரவேற்பு அளித்ததில்லை என்பதை பெருமையுடன் குறிப்பிடுகிறேன்.

சென்ற ஊசி அவசரத்தில் தயாரானதால் சில குறைகள் அதில் காணப்படுகின்றன. இவைகளை யெல்லாம் நீக்கி, போகப் போக பல புது அம்சங்களையும் அதிகப் பக்கங்களையும் சேர்த்து "குண்டுசி"யை இணையற்ற சினிமாப் பத்திரிகை ஆக்குவதே என் நோக்கம். இதற்கிணங்க இந்த மாதப் பத்திரிகையில் எட்டு பக்கங்கள் அதிகமாக வெளியிட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கலாம்.

இந்த ஊசியின் பதினோராவது பக்கத்தில் ஸ்ரீ. கல்கி அவர்களின் ஆசிச் செய்தியை மிக மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறேன். சுமார் பதினறு வருஷங்களுக்கு முன்பு நான் பத்திரிகைகளுக்கு எழுத முற்பட்ட சமயத்தில் ஸ்ரீ. கல்கி என் விஷயதானங்களை வெளியிட்டு, எனக்கு ஊக்கமளித்தார். அது மட்டுமல்ல; நான் ஒரு சிறந்த எழுத்தாளன் ஆவதற்கு என்னென்ன முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்பதையும் விளக்கி வந்தார். உண்மையில், எனக்கு ஹாஸ்யச் சுவையை ஊட்டி, ஹாஸ்யப் போக்கில் எழுத வேண்டுமென்ற எண்ணத்தை உண்டு பண்ணியது அவருடைய எழுத்துக்கள் தாம்.

ஸ்ரீமான்கள். கல்கி, செளந்தரராஜன் ஆகியவர்களுக்கும், சென்ற ஊசியில் வெளியான ஆசிச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களை எழுதியுள்ளோருக்கும், "குண்டுசி" வாசகர்களுக்கும் என் வந்தனங்களை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

சென்ற இரண்டு மூன்று மாதங்களாக பட உலகம், நாடக உலகம், சங்கீத உலகம் ஆகிய மூவுலகையும் ஒரே உலுக்காய் உலுக்கிக் கொண்டிருக்கும் விஷயம் சர்க்கார் புதிதாய் விதிக்க நினைக்கும் தமாஷா வரிதான். இப்பொழுது அமலிலிருந்துவரும் 18-3/4 சதவிகித தமாஷா வரியை 33.1/3 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டுமென்பது சென்னை சர்க்காரின் எண்ணமாகும். இதை நிறைவேற்றுவதற்காக சென்னை சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு அதன் பேரில் விவாதமும் நடந்தது. அதன்பின் இவ்விஷயம் ஒரு பிரத்யேக கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது.

புதிய தமாஷா வரி

சர்க்கார் முதன் முதலில் தங்கள் எண்ணத்தை சில மாதங்களுக்கு முன் வெளியிட்டபோதே படத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் விழித்தெழுந்து தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இந்த வரி மூலம் சினிமாத் தொழில் எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை விளக்கிக் கூறினர். யுத்த காலத்தில் சினிமாப் படங்களுக்கு நிறைய வசூல் ஆனது உண்மைதான். ஆனால் யுத்தம் முடிந்த பின் இன்றைக்குள் படங்களின் வசூல் விஷயம் படுமோசமாகி விட்டது. பிரபல நக்ஷத்திரங்கள் நடித்த படங்கள் கூட தோல்வியுற்றிருக்கின்றன. எடுத்த படங்களையோ விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்களைக் காணோம். வெளி உலகில் ஏற்பட்டு வரும் பணப் புழக்கக் குறைவு சினிமா உலகை முதலில் பாதித்திருக்கிறது. இந்த நிலையில், யுத்தகாலத்தில் படத்தொழிலில் காணப்பட்ட சுபிட்சத்தையும் வசூலையும் மனதில் வைத்துக் கொண்டு சர்க்கார், சினிமா, நாடக, சங்கீதத் தொழில்கள் மீதுள்ள வரிச்சுமையை ஒரேயடியாய் அதிகரிப்பது புத்திசாலித்தனமாகாது.

சினிமா உலகம் ஒருபுறமிருக்க நாடகங்களின் நிலைமையைக் கவனிப்போம். சமீபத்தில் டி. கே. எஸ். சகோதரர்கள் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தற்கால நாடகக் கம்பெனிகளின் உள் விஷயங்களை தெளிவாய் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

நாடக நிலைமை

தமிழ் நாட்டில் நாடகக்கலை அடியோடு அழிந்து விட்டதாகத் தோன்றிய காலம் உண்டு. யுத்த நிலைமை காரணமாக நாடகங்களுக்கு நல்ல வசூல் ஆகவும், சென்ற சில வருஷங்களில் சில புதிய கம்பெனிகள் தோன்றி நாடகக் கலைக்கு அரிய தொண்டாற்றி வருகின்றன. நாடகங்களுக்கு நல்ல வசூல் ஏற்பட்ட காரணத்தால் சீன்ஜோடனை, காட்சி அமைப்புகள், உடைகள் இவைகளெல்லாம் வெகுவாக சிறப்படைந்திருக்கின்றன. சினிமாவைப் போலவே நாடகத்திற்கும் தற்போது வசூல் குறைந்து வருவதை சர்க்கார் கவனிக்க வேண்டும். 33-1/3 சதவிகித தமாஷா வரியானது நாடகக் கம்பெனிகளை பெரிதும் பாதிக்கும் என்றும், அதன் மூலம் நாடகக் கலையே தலை தூக்காமல் போகும் என்றும், நாடகத்துறையில் பல வருஷ அநுபவமுள்ள நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, டி. கே. எஸ் சகோதரர்கள் போன்றோர் கூறுகின்றனர்.

தலைதூக்க முடியாது

சங்கீத சபாக்காரர்களும் இந்த வரி உயர்வு தங்கள் சபாக்களை மிகவும் பாதிக்கும் என்று சர்க்காரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த வரி உயர்வை எதிர்த்து முன்பே படத் தொழில் பிரமுகர்களும், நாடக சபையினரும் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்பு கூட தென்னிந்திய பிலிம் சேம்பர் பிரதிநிதி

களும், சங்கீத சபைப் பிரதிநிதிகளும் நம் மந்திரிகளிடம் தூது சென்று தங்கள் கக்ஷியை எடுத்துக் கூறிவிட்டு வந்திருக்கின்றனர். சர்க்கார் தற்போதைய சினிமா, நாடக சங்கீதத் தொழில் நிலைமையை முதலில் நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். ஆரம்ப வளர்ச்சியில் இருக்கும் இந் தொழில்கள் இந்த வரியால் மிக பாதிக்கப்பட்டு க்ஷீணதசை யடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர்களது கடமையாகும். எனவே ஒன்று அவர்கள் தற்போதைய வரியை உயர்த்தக் கூடாது. அல்லது அதை சொற்பமாக மட்டும் உயர்த்த வேண்டும் என்பது நம் வேண்டுகோள்.

‘கல்கி’யின் ஆசிச் செய்தி

★

அன்பார்ந்த ஸ்ரீ. டி. ஆர். எஸ். கோபால் அவர்களுக்கு,

தங்கள் நவம்பர் 8உ கடிதம் கிடைத்தது. “குண்டுசி” என்னும் பத்திரிகையைத் தூய சினிமாப் பத்திரிகையாக நடத்த ஆரம்பித்திருப்பதுபற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தங்களுடைய இலட்சியம் பூரண வெற்றியடைய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

(ஒப்பம்) ரா. கிருஷ்ணமூர்த்தி.

வரியை உயர்த்தக் கூடாது

கலை அபிவிருத்தியைப்பற்றி கவனிப்போமானால் சர்க்கார் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் மட்டும் ஆதரவு அளிக்க முற்பட்டுவிட்டால் நம் லளித கலைகள் அபாரமாக முன்னேறி இணையற்ற ஸ்தானத்தை அடைந்து விடும் சர்வகலாசாலைகளில் சங்கீதம், நாட்டியம், சினிமா போன்ற கலைக் கல்வியைப் பாடமாக வைத்து மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். படித்த கலைஞர்கள் இத் தொழிலில் ஈடுபடும்போது இத் தொழில்களின் கௌரவம் பன்மடங்காய் பெருகும். அதன் மூலம் தான் இத்தொழில்களில் இருந்து வரும் ஊழல்களும் ஒழிந்து தூய்மை அடையும்.

யுத்த காலத்தில் இந்திய சர்க்கார் சினிமாத் தொழிலுக்கு ஒரு நன்மையைச் செய்தனர் தங்களது பிரசாரத்திற்கு செய்திப் படங்களைத் தயாரித்து வெளியிட்டு வந்தனர். ஆனால் இது சம்பந்தமான தயாரிப்பு ஸ்தாபனங்களை (இன்பர்மேஷன் பில்ம்ஸ், இந்தியன் நியூஸ் பெரேட்) யுத்தம் முடிந்ததும் திடீரென்று மூடியது மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. ஆகவே அந்த இரண்டு ஸ்தாபனங்களையும் சர்க்கார் மீண்டும் ஸ்தாபிக்கப் போகிறார்கள் என்ற விஷயம் எல்லோருக்கும் சந்தோஷத்தை அளிக்கும். தற்போதைய சுதந்திர சர்க்காரின் கீழ் இந்த ஸ்தாபனங்கள் முன்னைவிடப் பாராட்டத் தக்க—தேசியமான—சேவை செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

சமீபத்தில் அரங்கேறிய ராஜாமணி.

தமிழ் ஸினேரியோ

பாலபாரதி ச. து. சு. யோகி

சினிமா சாஸ்திரத்தைக் கரைத்துக் குடித்தவர் பிலிம் டைரெக்டர் பாலபாரதி ச. து. சு. யோகி. அவர் எழுதிய நுட்பம் மிகுந்த இக்கட்டுரை சாதாரண வாசகர்களுக்கு கரடு முறடாக இருப்பினும், சினிமா நுட்பங்களில் அக்கரை உள்ளவர்கள், கதை வசனம் எழுதவும் டைரெக்டர்கள் ஆகவும் விரும்புவோர் அனைவரும் இதை அவசியம் படிக்கவேண்டும்.

—ஆசிரியர்

"ஸ்ரீமான் குண்டூசி"—பெயருக்கேற்ப மிகவும் குத்தலான பேர்வழி!

"தேளுக்கு அதிகாரம் கொடுத்தால் நாழிக்கொரு முறை கொட்டுமாம்" 'குண்டூசி'க்கு அதிகாரம் கொடுத்தாலோ ....? அவரது குத்தல்களைத் தாங்குவதற்கு நான் என்ன (PIN CUSHION)குண்டூசிப் பஞ்சணையா?"

ஆகவே அவர் "தமிழ் ஸினேரியோ" என்றதும் அச்சமுற்ற என்னுள்ளம் "ஆஹா" என்று ஆமோதித்ததில் ஆச்சரியமேது?

அவர் கூறினார்:—"நாம் தமிழர் (இது யாருக்குத்தான் தெரியாது?), நம் நாடு தமிழ் நாடு (அது எது என்பதை ஆந்திரர்களைக் கேட்க வேண்டும்!), நம் மொழி தமிழ் மொழி ('தமில் வால்க இந்தி வீல்க'), நாம் எடுக்கும் படங்களோ தமிழ்ப் படங்கள் (போடும் படம் தலைப்புப் பெயர்கள் ஆங்கிலம் என்பதை அவர் மறந்து விட்டார்), அதற்காக எழுதும் ஸினேரியோவும் (தமிழ்ப் படங்களுக்கு அம்மாதிரியான ஒன்றின் அவசியமே கிடையாதே!) தமிழில் தான் இருக்க வேண்டும்" என்றெல்லாம். முழுவதும் சொன்னால் த, மி, ழ் என்ற மூன்று எழுத்துக்களும் அச்சுக்கோப்பவருக்கு அகப்படாமல் போய் விடும்!

இவர்மட்டுமென்ன? இன்னும் அநேகர் என்னைத் "தமிழில் ஸினேரியோ எழுதமுடியுமா?" என்று கேட்டதுண்டு. முடியுமென்று நானும் சொன்னதுண்டு. ஆனால் அந்த "முடியுமை" சரியாக முடித்தது மட்டும் கிடையாது.

இப்போது என் வாக்கை நிரூபிக்கவேண்டுமென்பது ஸ்ரீமான் குண்டூசியாரின் குத்தலான, குறும்பான, கொடூரமான கட்டளை. அக்கட்டளைக் கிணங்கிய அறைகுறையான, அவலமான, அவசரமான முயற்சியிது.

"அளந்தது போதும், விஷயத்திற்கு வாரும்" என்கிறார், என்னைக் காட்டிலும் அவசரமான ஒரு பொறுக்காப் பேர்வழி. இதோ வந்துவிட்டேன்.

தோற்றுவாய்

"ஸினேரியோ" என்பது ஒரு ஆங்கிலச் சொல், தமிழில் அதன் பிரதிபதம் "காட்சிக் கோப்பு."

இப்பதம் சினிமாவுக்கும் சரி, டிராமாவுக்கும் சரி—பொதுவானது.

சினிமா, டிராமா—இரண்டுமே ஆங்கிலப் பதங்கள் தாமே என்கிறார் ஒருவர்.

வாஸ்தவம். டிராமாவிற்கு எற்கெனவே தமிழில்— பேச்சுத் தமிழின் மட்டுமல்ல, இலக்கியத்தில்கூட ஒரு பெயருண்டு—அதுதான் நாடகம். தமிழையே இலக்கியத் தமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என மூன்றாகப் பிரித்துள்ளனர் நம் பெரியோர்கள். நம் சிறுவர்கள் பிள்ளையார் சுழி போடும்பொழுதே அப்பெருமானை "சங்கத்தமிழ் மூன்றும் தா" என்றுதான் தோத்தரிக்கின்றார்கள்.

டிராமா என்பதைக் காட்டிலும் நாடகம் என்பது எவ்வளவோ அழகான வார்த்தை. அழகுமட்டுமல்ல, அர்த்த புஷ்டியும் நிரம்பியது. நாடு அகம்; அதாவது, அகத்தை நாடுவது என்பது அதன் பொருள். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்." என்ற பாரதியாரின் பாடலே அதன் நெறி. "வாக்கினிலே" என்பதோடு "நடிப்பினிலே" என்பதையும் சேர்த்து அறுசீரை எழுசீராக்கினுல் இன்னும் அது பொருத்தமாக அமையும். "நாடகத்தால் உன்னடியார் போல் நடுவே தான் நடித்து வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும்" என்றுவிழைகின்ருர் நம் அருமை மணிவாசகனும்.

நாடகக்கதை, களம் (ஆக்ட்), காட்சி (ஸீன்) என்னும் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு எழுதப் படும். இதற்கு ஆங்கிலத்தில் ட்ரமேடிக் ஸினேரியோ ஆப் தி ஸ்டேஜ் ப்ளே என்பர், தமிழில் நாடகம் என்ருலே இதுதான்.

சினிமா என்பதோ ஒரு புதுக் கலை. உலகத்திற்கே ஒரு புதுமையானது. தமிழ் நாட்டுக்குப் புத்தம் புதியது. இதற்கு ஆங்கிலத்திலேயே பல பெயர்கள் உண்டு. பிளிக்ஸ் என்பது மின்மினிப் படம். பிலிம் என்பது படச்சுருள் அல்லது சுழற்படம் எனலாம். மோஷன் பிக்சர் என்ருல் சலனப் படம். மூவி என்பதும் அது தான். ஸவுண்டு பிக்சர் என்ருல் ஒலிப் படம், அல்லது பேசும் படம். மியூஸிகல் பிக்சர் என்ருல் பாடும் படம். ஸவுண்டு மோஷன் பிக்சர் என்ருல் சலன ஒலிப் படம். இத்யாதி இன்னும் எத்தனையோ.

"சினிமா"—என்பது ஸினிமோடோகிரூப் என்னும் தொடர் பதத்தின் சுருக்கமான ஒருமைக் குறியது இதன் பொருள் 'காட்சிச் சலன சித்திரம்' எனலாம்.

சினிமாக் கதையிலும் ஸீக்வென்ஸ் அல்லது களம், ஸீன் அல்லது காட்சி இரண்டும் உண்டு. இத்துடன் ஷாட் அல்லது தூக்கு என்பதும் சேரும்.

சினிமா என்னும் பதத்தைத் தமிழாக்காமல் உபயோகிப்பதே நலம் என்பது அடியேனது தாழ்ந்த அபிப்பிராயம். உலகத்தின் எல்லா மொழிகளுக்கும் இது ஓர் பொதுப்பெயராய் துலங்குகிறது. தவிர டிராமா என்பதுபோல் சினிமா என்னும் வார்த்தையும் தமிழ் சொற் கோர்வைப் பண்பாட்டை மீறுவதில்லை.

பரி பாஷை

ஸினேரியோ அல்லது காட்சிக் கோப்பு ஒரு கதையை சினிமாப் பண்புக்கேற்பச் செப்பனிட்டமைப்பது-கேமிரா (படக் கருவி), ஸவுண்டு காமிரா (ஒலிக் கருவி) இவற்றின் கட்டுக் கோப்புகளுக்கேற்பக் கதையைப் பலப் பல தூக்குகளாகவும், பல தூக்குகள் சேர்ந்த காட்சிகளாகவும், பல காட்சிகள் கூடிய களங்களாகவும், களங்கள் திரண்ட கதைப்படம், அல்லது படக் கதையாகவும் எழுதுவது.

இத்தகைய கதையை எழுதுபவருக்குப் படக்கருவி, ஒலிக் கருவி, இவற்றின் திட்ப நுட்பங்களெல்லாம் நன்கு தெரிந்திருக்கவேண்டும். தூக்கும் தூக்கும், காட்சியும் காட்சியும், களமும் களமும் இழுமென் முறையில் விழுமியதாய் நடைபெறவேண்டும். தோற்றுவாய், வளர்ச்சி, உச்சம், திருப்பு, முடிவு என்ற கதைக் கலையின் போக்குச் சிறப்போடு திகழவேண்டும். (தீம்) கருத்தை அறிந்து, அதற்கு அனுகு

சுப்பு—சாம்பு! உனக்கு மிக இஷ்டமான நடிகை யார் சொல்லு!
சாம்பு:—'சிந்தாமணி'யில் நடித்த வசுந்தரா தேவி.
சுப்பு:—போடா சுத்த முட்டாள்! 'சிந்தாமணி'யிலே சந்தானலக்ஷ்மின்னுடா நடிக்கிருள்! 'அம்பிகாபதி'யில் நடித்த வசுந்தரா தேவின்னு, சொல்லு!

ாக யாவற்றையும் அமைக்க வேண்டும்.

இனி ஸினேரியோவில் பொதுவாக எல்லோராலும் உபயோகிக்கப் பெறும். ஆங்கில பரிபாஷைகளுக்கேற்ற தமிழ்ப் பரிபாஷைகளை ஆராய்வோம்.

முதற்கண் தூக்குடன் தூக்கைக் கோக்கும் பதங்களைக் கூறுவோம்,—

ஆங்கிலம்	தமிழ்
பேடின்	—வளர் பிறை
லாங் அல்லது ஸ்லோ பேடின்	—நீள் வளர் பிறை
பேடவுட்	—தேய்பிறை
லாங் பேடவுட்	—நீள தேயபிறை
டிஸால்வ்	—தேய் வளர் பிறை
வைப்	—துடைப்பு
கட்	—வெட்டு
ஐரிஸ் இன்	—உட்சுழல்
ஐரிஸ் அவுட்	—வெளிச் சுழல்
ஸூபர் இம்போஸ்	—அடுக்குக் காட்சி
மல்டிபிள எக்ஸ்போஷர்	—அடுக்குத் தூக்கு
ஸ்டாப் மோஷன்	—சலன நிறுத்தம்

[இவற்றில் வைப் அல்லது துடைப்பில பலவகை உண்டு.—அவை ஸ்ட்ரைட், ஸலேண்ட்,ஸ்கொயா, ஆங்குலர்,டிசைன், ஐரிஸ் என்பன.தமிழில் நேர் நிரை, சதுரம், கோணம் கோலம், வட்டம் எனலாம். நேர்த் துடைப்பில் வெர்டிகல், ஹாரிஸாண்டல், அதாவது நெட்டு படுக்கை என்று இருவகை உண்டு]

அடுத்த படியாக ஒரு காட்சியை எடுப்பதல் படக் கருவிக்கும் படப் பொருளுக்கும் உள்ள தூரம். கோணம் இவைகளைக் குறிக்கும் சொற்களை ஆராயலாம்:—

ஆங்கிலம்	தமிழ்
டிஸ்டண்ட் ஷாட்	—நெடுந் தொலைவுக்காட்சி
லாங் ஷாட்	—தொலைவுக் காட்சி
மீடியம லாங்ஷாட்	—தொலைவு மதயக் காட்சி
மீடியம் ஷாட்	—மத்ய அல்லது நடுக் காட்சி
மீடியம் க்ளோஸ் அப்	—மத்ய அண்மைக் காட்சி
க்ளோஸ அப்	—அண்மைக் காட்சி
பிக்ளோஸ் அப் அலலது பிகர் இன்டிகேஷன்	—நுண்ணணிமைக் காட்சி

[இவைகள் தூரத்தைக்குறிப்பவை]

ஆங்கிலம்	தமிழ்
டாப் ஷாட்	—முடிநேர்க் காட்சி
டாப் ஆங்கிள்	—முடி நிறைக்காட்சி
பாட்டம் ஷாட்	—அடி நேர்க்காட்சி
பாட்டம ஆங்கிள்	—அடிநிறைக்காட்சி
ஸ்ட்ரெயிட் ஷாட்	—நேர்க் காட்சி
ட்ரக் ஷாட்	—கருவிப் பாய்ப்பு
க்ரேன் ஷாட்	—தூக்கிப் பாய்ப்பு

[இவைகள் படக்கருவியின் நிலையையும, சலனத்தையும் -குறிப்பவை. ட்ரக், க்ரேன் என்னும் பாய்ப்புகள் ஸ்லோ அல்லது க்விக் என்னும் விளம்பன, துரித காலத்தில், பார்வேர்டு, பேக் வேர்ட், ஸைட், ஸ்லேண்டு, ஆர்க் என்ற வகையில் முனனும் பின்னும்' பக்கமும் பக்கு வாட்டும் வளைவுமாக, தொலைவும் அணைமையும் உள்ளிட்ட வகையில் பாயும்]

ஆங்கிலம்	தமிழ்
டில்ட்	—நெட்டுச் சலனம்
பேன்	—புறச்சலனம்
டில்ட் ஆங்கில்	—நெட்டுச் சாய்ப்பு
டில்ட் பேன்	—நெட்டுப் புறச் சலனம்

[இவை படக் கருவியின் நிலைத்து நிலையின் அசைவு நெறிகளைக் குறிப்பன. நெட்டில் மேலும் கீழும், புறத்தில் வலமும் இடமும், நெட்டுப்புறத்தில் மேல் கீழ் வலம் இட மாகவும் நிகழும்.]

ஆங்கிலம்	தமிழ்
லென்ஸ் சேஞ்ஜ்	—கண் மாற்று
போகஸ் மேனிபுலேஷன்	—நோக்கநிமைப்பு
மல்டிபள் லென்ஸ்	—பன்மைக் கண்
வைட் ஆங்கிள் லென்ஸ்	—அகலக்கண்
ஸாப்ட் போகஸ் லென்ஸ்	—நளினக்கண்

[இவை படக் கருவியின் கண்ணுன கண்ணுடியின் பண்பாடுகளையும் பயனையும் குறிப்பவை]

ஆங்கிலம்	தமிழ்
ரிவர்ஸல் ஷாட்	—தலைகீழ்ச் சுழல்

[இது படச் சுருணையின் சலனத்தைத் தலைகீழாய் மாற்றுவது. இதனுல் படப் பொருளின் செயலும் தலை கீழாய்த் தோன்றும்]

ஆங்கிலம்	தமிழ்
மாஸ்க் ஷாட்	—மறைப்புக்காட்சி

[இது படச் சுருணையின் படம் விழும் பரப்பின் ஒரு பகுதியை மறைத்து மறு பகுதியில் மட்டும் படம் எடுப்பது. இது ஒரு தந்திரக் காட்சி]

(தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்)


ஒட்டுக் கேட்கிறது

தீபாவளி வாழ்த்துக்கள்

.. இன்று முதல் ..

திருச்சி .... ராஜா
சேலம் .... ஸரஸ்வதி
திருநெல்வேலி ... பாபுலர்
காரைக்குடி ... ஸரஸ்வதி
புதுக்கோட்டை .. ராஜா & வெஸ்ட்
ராமநாதபுரம் .. ராமநாதன்
ராஜபாளையம் . சந்திரபிரபா

AVM புரொடக்ஷன்ஸ் தயாரித்த

தமிழ்

ப்ரகாஷ்

ராம ராஜ்யம்

D.K. பட்டம்மாள் - T. S. பகவதி

R. ராஜேஸ்வரி - K. V. ஜானகி - P. G. வெங்கடேசன்.
K. தேவநாராயணன் - D. B. ராமச்சந்திரன் - K. P. சந்திரன்

..... மற்றும் பலரும் பாடிய பாட்டுகளுடன் .....

தயாரிப்பு :- ஏ வி எம் ஸ்டுடியோஸ், தேவகோட்டை ரோட் (S.I.Ry.)

சமீப காலமாக கதாநாயகி வேஷங்களில்
பிரபல்யம் அடைந்துவரும் திருச்சூர்
டி. பிரேமாவதி. ("குண்டூசி"க்குப்
பிரத்யேகப் படம்.)

நிருத்தியகுமாரி கமலா

நான் சமீபத்தில் ஒரு நாள், "ஸில்வர் ஸ்கிரீன்" பத்திரிகையின் பழைய பிரதிகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன். திடீரென்று, அதில் நான் வெளியிட்டிருந்த ஒரு பம்பாய்ச் செய்தி என்னையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அப்படி என்னை ஆச்சரியத்திலாழ்த்திய செய்தி என்னவென்று கேட்பீர்கள். அதை கீழே தருகிறேன்:—

வாழ்க்கை வர்ணனை

"ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு பம்பாய் ஆஸ்திக சமாஜ ஹாலில், மூன்று வயதுள்ள பேபி கமலா நடனம் செய்தாள். இதற்கு சில மாதங்களுக்குப் பிறகு க்ஷய ரோக நிவாரண நிதிக்காக பம்பாய் சரஸ்வதிகான சபையாரால் நடிக்கப்பட்ட "தேச-பக்தி" என்ற தமிழ் நாடகத்தில் தர்பார் சீனில் பேபி கமலா சிறப்பாக நடித்தாள். இந்த நாடகத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். அவர்கள் இக்குழந்தையின் நடனச் சிறப்பைப் பெரிதும் பாராட்டினார்கள். பத்திரிகைக்காரர்களும் புகழ்ந்தார்கள்."

"ஸில்வர் ஸ்கிரீன்"—24-12-38

மேற்படிச்செய்தியைப் படித்தபின் நான் யோசிக்க லானேன். "இந்த பேபி கமலா யார்? ஒரு வேளை தற்போது தமிழ்ப் படங்களில் பிரபலமாகி யிருக்கும் பேபி கமலாவே தானோ?" என்று. இந்த பேபி கமலா, கிஸ்மெட், ராம் ராஜ்யா ஆகிய பம்பாய்ப் படங்கள் மூலம் பிரபலமாகி யிருப்பதும், வயதில் ஒற்றுமை இருப்பதும் என் சந்தேகத்தைப் பலப்படுத்தின. பின்னர் விசாரித்ததில், அன்று ஆஸ்திக சமாஜ ஹாலில் நடனமாடியும், "தேச பக்தி" நாடகத்தில் நடித்தும் பம்பாய் வாசிகளின் பாராட்டுதலைப் பெற்ற அதே பேபி கமலாதான் இப்பொழுது தமிழ்ப் பட ரஸிகர்களை நடனத்தின் மூலம் கவர்ந்திருப்பவள்—என்பது ஊர்ஜிதமாயிற்று.

தென்னிந்தியப் பட ரஸிகர்களும்—ஏன் சில பத்திரிகாசிரியர்களும்கூட, "பேபி கமலா நடித்த முதல் படம் கிஸ்மெட்" என்றும், "முதலில் நடித்த தமிழ்ப் படம் ஜகதலப்பிரதாபன்" என்றும் நினைத்து வருகிறார்கள். இது முற்றிலும் தவறு. கமலா கிஸ்மெட், ராம் ராஜ்யா ஆகிய ஹிந்திப் படங்கள் மூலம் பிரபலமடைந்த பின்னரே தமிழ்ப் படங்களிலும் பிரபலமடைந்தாளென்றாலும், அவள் நடித்த முதல் படமும்—முதல் தமிழ்ப் படமும் வாலிபர் சங்கம் என்பதாகும்.

"தேச பக்தி" நாடகத்தில் கமலாவின் நடிப்பைப் பாராட்டியவர்களில் டைரெக்டர் ஏ. என். கல்யாண சுந்தரமும் ஒருவராவார். அப்பொழுது அவர் பம்பாய் ஸாகர் மூவிடோனின் வாலிபர் சங்கம் படத்தைத்

குண்டூசி

எழுதியது

தயாரித்துக் கொண்டிருந்தார். ஆதலால், அவர் பரீக்ஷார்த்தமாக கமலாவுக்கு ஒரு சிறிய பாகத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தார். அந்தப் பரீக்ஷையில் நல்ல மார்க் வாங்கி விடவே, ஸ்ரீ. கலியாண சுந்தரம் தாம் அடுத்தபடியாகத் தயாரித்த ராம நாம மகிமை என்ற தமிழ்ப் படத்திலும் கமலாவுக்கு வேஷம் அளித்தார். அதிலும் கமலா நல்ல வெற்றி பெற்றாள்.

இந்த இரண்டு படங்களிலும் கமலா நடித்திருப்பதோடு நடனமும் ஆடியிருக்கிறாள்; அதோடு பாடியுமிருக்கிறாள். பிந்தின படத்தில் கமலா பாடியுள்ள "மாரமணனே" என்ற பாட்டு எச். எம். வி. இசைத் தட்டிலும் வெளிவந்திருக்கிறது. இவ்வளவிருந்தும், இவ்விரு படங்களும் வெற்றி பெறாமையால்தான் கமலாவைப் பற்றி தமிழ்ப்பட ரஸிகர்கள் அப்பொழுதே தெரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டது.

ராம நவமியன்று அரங்கேறி' ராம நாம மஹிமை படத்தில் நடித்ததால் போலும் கமலாவுக்கு ஸ்ரீ ராமபிரானின் கிருபா கடாக்ஷம் பரி பூரண மாய் ஏற்பட்டுவிட்டது. மேற் சொன்ன இரண்டு படங்களிலும் கமலாவின் நடனம் மிக அழகாக அமைந்திருந்ததைக் கண்ட பம்பாய் ரஞ்சித் ஸ்டுடியோக்காரர்கள் தங்கள் ஷாதி ஹிந்திப் படத்தில் நடனமாடும் சந்தர்ப்பத்தை கமலாவுக்கு அளித்தனர். இந்த முயற்சி வெற்றிகரமாக முடியவே, அவர்கள் கமலாவுக்குத் தைரியமாக ஒரு வேஷத்தையும் கொடுத்து கஞ்சன் ஹிந்திப் படத்தில் நடிக்கச் செய்தனர். புத்திக் கூர்மை மிகுந்த கமலா சொல்லிக்கொடுத்ததை அப்படியே பேசி நடித்து விட்டாள். ரஞ்சித்தின் அருமான் ஹிந்திப் படத்தில் தோன்றும் பிச்சைக்காரப் பெண் பேபி கமலாதான். இதன் பிறகு சந்த்னி என்ற ஹிந்திப் படத்திலும், சாதனா போஸ் தோன்றிய விஷ கன்னிகை படத்திலும் கமலா நடித்தாள். இவ்வளவு படங்களில் நடித்திருந்த போதிலும், மிகப் பிரசித்தி பெற்ற கிஸ்மெட், ராம் ராஜ்யா ஆகிய இரு ஹிந்திப் படங்களிலும் நடித்த பின்னர்தான் தென்னாட்டுப் பட ரஸிகர்களின் கவனம் குறிப்பாக கமலாமீது விழத் தொடங்கியது. அது முதல் அவளுக்குத் தமிழ்ப் பட உலகில் மிகுந்த கிராக்கி ஏற்பட்டு விட்டது.

கமலாவின் பூர்வீகம் மாயவரம் ஆகும். ஆனால், அவளுடைய பெற்றோர்கள் பல வருஷ காலம் பம்பாயிலேயே வசித்து வந்தனர். பம்பாயிலிருந்தபோது கமலா, படங்களில் நடித்தபடியே, கதக்களி, மணிப்புரி முதலிய கீழ்நாட்டு நடனங்களை சுந்தர் பிரஸாத், லச்சு மஹராஜ், புரொபஸர் மோரே ராஜா ஆகிய நாட்டிய நிபுணர்களிடம் கற்றுக்கொண்டாள். ராம ராஜ்யா படம் முடிந்ததும் தென்னாட்டிற்குச் சென்று பரத நாட்டியத்தை கமலாவிற்குக் கற்பிக்கும்படி செய்யவேண்டும் என்று கமலாவின் தாயார் ராஜம்மா நினைத்தார் அதன்படியே அவர்கள் தென்

னாட்டிற்கும் வந்தனர். பிரபல வழுவூர் ராமையா பிள்ளையிடம் கமலா பரத நாட்டியத்தைப் பயின்று, குருவுக்கு ஏராளமான புகழைச் சம்பாதித்துக் கொடுக்கும் சிஷ்யை ஆகி விட்டாள். ஆனால் முதலில் அவரது தாயார் நினைத்தபடி பம்பாய்க்குத் திரும்பிப் போகும் எண்ணத்தை மட்டும் நிறைவேறாமல் செய்து விட்டன இந்தத்தமிழ்ப்படங்கள். கமலா தென்னாட்டிற்கு வந்து தங்கியதும் அச்செய்தி மெதுவாய்ப் பரவ ஆரம்பித்தது. "**ராம்ராஜ்யா** வில் நடனம் ஆடிய பெண் சென்னையில் தங்கியிருக்கிறாள்" என்பதை **ஜகதலப்ரதாபன்** படக் கர்த்தாக்கள் கேள்விப்பட்டு, கமலாவைக் கண்டுபிடித்து தங்கள் படத்தில் நடிக்கச் செய்தனர். அவர்களுக்குக் கூட முதலில் கமலா தமிழ் நாட்டுப்பெண் என்பது தெரியாதாம். இந்தப் படத்தில் கமலா ஆடியிருக்கும் நடனம் ரஸிகர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இப்படம் அசாத்தியமான வெற்றியைப் பெறவே கமலாவின் பெயரும் மிக பிராபல்யமடைந்தது.

அடுத்தபடியாக கமலா நடித்த படம் பிரகதியின் ஸ்ரீ வள்ளி ஆகும். **ஜகதலப்ரதாபனில்** அடைந்த புகழை கமலா இப்படத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டாள். பின்னர் வரிசையாக **என்மகன், ஏகம்பவாணன், கடகம்** ஆகிய படங்களில் அதி அழகாக நாட்டியமாடவே, அவளது புகழ் உச்ச நிலையை அடைந்து, இப்பொழுது நக்ஷத்திர பதவியையும் பெற்றிருக்கிறாள்.

சமீப காலத்தில் இணையற்ற வெற்றி பெற்றுள்ள **நாம் இருவர்** படத்தில் கமலாவின் நடனம் அவள் முன்படைந்துள்ள அத்தனை புகழுக்கும் சிகரம் வைத்தது போல் விளங்குகிறது. டி. கே. பட்டம்மாளின் பாட்டுடன் கமலாவின் அபிநயம் ஒன்று சேரும் போது, ஸ்ருதியும் குரலும் இழையும் போது ஏற்படும் ஆனந்தம் நமக்கேற்படுகிறது. நாம் இருவரைப் பார்த்த எந்த ரஸிகனும், "சினிமாப் பட நடனத்தில் பேபி கமலாவுக்கே முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும்" என்று தயங்காமல் கூறிவிடுவான். தமிழ்ப் பட உலகில் நடனத்தின் மூலமே ஒரு முதல்தர நக்ஷத்திரத்தின் மௌஸைப் பெற்றிருக்கும் தனிப் பெருமை கமலாவைச் சேரும்.

கமலா நடனத்தில் நல்ல புகழ் பெற்றுள்ளதற்கு முக்கிய காரணங்களாயுள்ளவை, அவளுடைய வசீகரமான முகத்தோற்றம், நெளியும் அங்கங்கள், நீண்ட கரங்கள், பாவங்களை மின்னல் வேகத்தில் தனித் தனியாக முக ஜாடையில் காட்டும் திறமை ஆகியவையாகும். அவளுடைய நாட்டியத்தில் செயற்கையை விட இயற்கை அம்சங்கள் மேலோங்கி நிற்பதால், "கமலா நாட்டியத்திற்காகவே பிறந்தவள்" என்று கூறுவது மிகையாகாது.

சிவந்த மேனியும், புறு புறுப்பான

குணமும் உடைய குமாரி கமலா ஐயர் ஜாதியைச் சேர்ந்தவள். அவளுடைய தாய் மாமன் நால்வரும் சென்னையில் உத்தியோகத்திலிருக்கிறார்கள். கமலா தான் குடும்பத்தின் மூத்த பெண். அவளுக்கு இரண்டு தங்கைகள் மட்டும் இருக்கின்றனர்

கமலா 1934-ம் வருஷம் ஜூன் மாதம் பிறந்தவள். நான்காவது வயதிலேயே நடனத்தைக் கற்றுக் கொள்ளவும் சினிமாவில் நடிக்கவும் அவள் முற்பட்டு விட்டதால பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிப்பது சாத்தியப்படவில்லை. ஆனால் அவள் வீட்டிலேயே ஒரு உபாத்தியாயரிடம் படித்து வருகிறாள். ஒரு நான்காவது

,,ஜகதலப்பிரதாபனி"ல் கமலா

பாரா மாணவனின் படிப்பளவு அவள் தற்போது படித்திருப்பதாகச் சொல்லலாம். தாய் பாஷையான தமிழைத் தவிர ஹிந்தியும், கொஞ்சம் ஆங்கிலமும் அவளுக்குத் தெரியும்.

சில படங்களில் கமலா நாட்டியமாடியிருப்பதோடு சிறு பாத்திரங்களை ஏற்றும் நடித்துமுள்ளாள். நாட்டியத்தில் ஒருவர் அடையக்கூடிய புகழ்

எவ்வளவோ அவ்வளவையும் கமலா அடைந்து விட்டாள். தென்னாட்டிற்கு வந்தது முதல் கமலாவின் நாட்டியக் கச்சேரி பல ஊர்களில் அடிக்கடி நடைபெற்றுள்ளது. அவளுடைய கச்சேரிக்கு ஆரம்பம் முதலே நிறைய வசூல்; அவள் நடனம் ஆடும் படங்களுக்கோ பெருமிதமான பொதுஜன ஆதரவு.

கமலா பகவானருளால் இனிமையான குரலைப் பெற்றிருக்கிறாள். தனக்குக் கொடுக்கும் பாட்டுகளையும் கச்சிதமாய்ப் பாடிவிடுகிறாள். நாம் இருவர் படத்தில் அவள் பாடியிருக்கும் "கருணா மூர்த்தி", "காந்தி மஹான்" ஆகிய இரண்டு பாட்டு

[தொடர்ச்சி 67-ம் பக்கத்தில்].



1943

> 1943-ம் வருஷம் முதல் மற்றும் மூன்று வருஷங்களில் 'குண்டூசி' அளித்துள்ள பதில்களில் சிறந்த சிலவற்றை இங்கே வெளியிட்டிருக்கிறோம். அடுத்த ஊசி முதல் நேயர்கள் அனுப்பும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படும்.
>
> —ஆசிரியர்.

கே. எஸ், வி, மாரியப்பன் (ஆலங்குளம்)

கொஞ்ச காலமாக ஏன் தந்திரங்கள் நிறைந்த (ஸ்டன்ட்) படங்கள் வெளிவருவதில்லை?

படங்களின் விளம்பரங்களுக்குக் கண்டு மிச்சம் இருந்தாலல்லவோ படங்களில் புகுத்துவதற்கு!

கே. எம். குப்புஸ்வாமி (திருப்பத்தூர்)

"சௌபாக்கியவதி" யில் நடித்த ஆயிரம் முகம் ராம்குமார் இப்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

பால்ய விவாஹத்தை ஒழிப்பதற்காக "பால்ய விவாஹ"த்தை சிருஷ்டித்தார்! பின்னர் பட முதலாளியாகி விட்ட தம்மை வைத்துப் படம் எடுக்கக் கூடிய "மஹா பட முதலாளிகள்" தமிழ் நாட்டில் இல்லையென்றுதான் சும்மா இருக்கிறார் போலும்!

எஸ். சிவநேசன் (கமுதி)

ஸி, டி. ராஜகாந்தத்தின் விலாஸம் என்ன?

C/o காளி என். ரத்தினம், இவர் எந்த ஊரிலிருக்கிறாரோ அந்த ஊர், அந்த ஊர் அல்லது அதற்குச் சமீபத்திலுள்ள போஸ்ட். நீர் கடிதம் எழுதாமலிருப்பதே சிறந்த மார்க்கம்!

கே. கோபாலன் (வேலூர்)

சினிமாவில் சேருவதற்கு முன் பணம் கொடுக்க வேண்டுமா?

முன் பணம் கொடுப்பது முட்டாள் தனம், முன் பணம் பெற்றுக்கொள்ளுவது அதி புத்திசாலித்தனம்!

என் ,வி. (தொட்டியம்)

என் நண்பரொருவர் யூ. ஆர். ஜீவரத்தினத்தின் சங்கீதத்தைப் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்? இதன் மர்மம் என்ன?

மர்மம், இந்த நண்பருக்குப் பாடத் தெரியாது என்பதுதான்! இல்லையென்றால் பாடாமல் பேசிக் கொண்டிருப்பாரா?

ஜி. தேவராஜுலு தேசாய் (ஆம்பூர்)

என் மனைவி படத்தில் கே. சாரங்கபாணி ஏன் பட்லர் இங்கிலீஷ் பேசுகிறார்?

நல்ல இங்கிலீஷையெல்லாம் துரை கொண்டு போய் விட்டார்!

சாம்பமூர்த்தி (கோயமுத்தூர்)

தேவகன்யாவின் கடைசிக் கட்டத்தில் உமாபதி தன் காதலியின் காலில்

"தியாகய்யா"வில் பல புது முகங்களை சினிமாவுக்கு அளித்த ஸ்ரீ ரேணுகா பிலிம்ஸார் தங்கள் அடுத்த படமான "யசோதா கிருஷ்ணா" தமிழ்ப் படத்தில் இந்தப் புது முகம் யசோதாராவை அறிமுகப் படுத்தப்போகிறார்கள்.

விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவது சரியாகத் தோன்றவில்லை.

அதாவது, அவர் ரகஸியமாகச் செய்திருக்க வேண்டியதை நமக்கெல்லாம் தெரியும்படி செய்து விட்டார் என்பதுதானே உமது குற்றச் சாட்டு!

ஜோஹரா-கான்
(மொரட்டுவ, இலங்கை)

சினிமாவில் நடிக்கத் தெரியாதவர்களுக்கு பாடசாலைகள் ஏதேனும் இருக்கிறதா?

அட, ராமா! நம் சினிமா உலகை நீர் வேறு என்னவென்றுதான் நினைத்துக் கொண்டீர்?

"ரவீந்திரா" (கொழும்பு)

தக்ஷயக்ஞம், மாயா மச்சீந்திரா, அசோக் குமார், முதலிய படங்களில் சில்லரை வேஷங்களில் அற்புதமாக நடித்திருக்கும் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ஏன் பெரிய வேஷங்கள் கொடுக்கக் கூடாது?

நாமெல்லாம் சில்லரைக்குத் தவித்துக்கொண்டிருக்கையில் ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு சில்லரை (வேஷம்) தாராளமாய்க் கிடைக்கிறதே: அதைச் சொல்லும்!

ஏ. ஜே. கிருஷ்ணன் (குடியாத்தம்)

குண்டூசியாரே! உமக்கு மணம் செய்விப்பதற்காக இங்கே காதிருக்கும் ஊசி ஒன்றைத் தேடி வைத்திருக்கிறோம்.

நீர் தேடிப் பிடித்திருக்கும் ஊசிக்குக் காதிருக்கிறதோ இல்லையோ; நான் மணந்து கொண்டிருக்கும் 'ஊசிக்கு' ஒன்றல்ல இரண்டு காதுகளிருக்கின்றன. மெதுவாய் பேசும் ஸ்வாமி!

ஜி. எஸ். வாசன் (வாணியம்பாடி)

கே. டி. ருக்மணிக்குச் சகோதர சகோதரிகள் உண்டா? விவாஹமாகி யிருக்கிறதா? குழந்தைகள் உண்டா?

ஸ்ரீமதி ருக்மணி அவாது தாயாருக்கு ஒரே மகள். மகன் இல்லாமலிருந்தும் ஒரு மரு(று)மகனைத் தேடுவதில் ஏனோ அவாது தாயார் சிரத்தை கொள்ளவில்லை!

எம். எஸ். பிச்சுமணி (திருச்சி)

சினிமாவில் நடிக்கும் பெண்கள் டைரெக்டர்களின் கைப் பொம்மைகள் என்று கேள்விப்படுகிறேன்.

சில சமயங்களில், இந்த பெண்களிடத்தில் டைரக்டர்கள் தலையாட்டிப் பொம்மைகளாக இருப்பதுமுண்டு.

"கோணி ஊசி" (ஸ்ரீரங்கம்)

பொது ஜனங்கள் கொடுக்கும் 2½ அணாக்கள்தானே நம் நடிக நடிகைகளுக்கு சம்பளமாக கொடுக்கப் படுகிறது?

நிச்சயமாக இல்லை! நடிக நடிகைகளுக்கு முதலில் 'செக்'குகளாகவும், நோட்டுகளாகவும் பணத்தைக் கொடுத்துப் படத்தைப் பிடித்துக் கொண்டு வந்த பின்னர்தானே பொது ஜனங்கள் கொடுக்கிறார்கள்!

படி பார்த்தால், பாகவதர் சின்னப் பாவின் புத்திரர் ஆகிறதல்லவா?

ஆம்; சின்னம்மாவின் கணவர் சி(ந்த)ன்னப்பாதான்!

ஆர். வாசுதேவ மூர்த்தி (பங்களூர்)

அபரஞ்சி தினந்தோறும் என் கனவில் தோன்றி வருகிறாள். என்னிடம் ஆயிரம் பொன் இருக்கிறது. அவளது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

உம்மிடம் ஆயிரம் பொன் இருப்பதும் கனவில் கண்ட விஷயம்தான் என்பதைச் சொல்ல மறந்து விட்டீரே!

சு. ப. உ. கணேசன்
(பருத்தித்துறை)

நான் எஸ். எஸ். கொக்கோவைப் போல ஆவதற்கு என்ன செய்ய வேண்டும்?

மாம்பலம் பாண்டி பஸாரில் ஒரு அறையை எடுத்துக் கொண்டு ஒரு குரங்கை வளர்க்க வேண்டும். பிறகு மைலாப்பூருக்குச் சென்று குளத்தங் கரையில் திடீரென்று செத்துப் போக வேண்டும்!

1945

பி. எஸ். தங்கையா (புத்தளம்)

சினிமா நக்ஷத்திரங்களுக்கு சினிமாவில் நடிப்பதற்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்படுகிறது?

இவர்கள் "சுடப்படும்போது" இவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு 'மேக்கப்' ஒன்றுதான்! கேமிராவின் கூரிய கண்களிலிருந்து மட்டுமல்ல; ரஸிகர்களின் வசை அம்புகளிலிருந்து தப்புவதற்கும் இந்த மேக்கப்தான் கேடையமாய் விளங்குகிறது!

பு. ராசு (பாயிண்ட் பீட்ரோ)

டி. ஆர். மஹாலிங்கத்தின் முகமும், பி. எஸ். கோவிந்தன் முகமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாய் இருக்கிறதே?

இருவரையும் நீர் கிருஷ்ணன் வேஷத்தில் பார்த்து விட்டுக் கேட்கிறீர் போலிருக்கிறது!

எஸ். சுப்பையா
(குருநாகல், இலங்கை)

சினிமாவில் தாழ்த்தப்பட்டவர்களும் நடிக்கிறார்களா?

நடிக்கிறார்கள். இவர்கள் சினிமாவுக்கு வந்ததும் "உயர்த்தப்பட்டவர்கள்" ஆகிவிடுகிறார்கள்! ஆனால் ஒரு வேடிக்கை; உயர்ந்தவர்கள் சினிமாவில் சேர்ந்தாலோ அவர்களை சமூகம் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதுகிறது!

க. ஷண்முகம் (இலங்கை)

குண்டுசியாரே! உங்கள் மூளையை எனக்குத் தர முடியுமா?

அதிருக்கட்டும்; தற்போது தங்கள் மண்டையில் இருப்பது என்னவோ!

என். ஏ. சாமி (நானு ஓயா)

அமிர்தத்தின் பொன்னுசையைத் தீர்ப்பதற்கு சிவகவி முருகனருளால் நாணயங்களைக் குவிக்கிறாரே, இந்த

மளமளவென்று முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பி. எஸ். கோவிந்தன் கடைசியாக "தலைவாங்கி அபூர்வசிந்தாமணி"யில் மிகத் திறம்பட நடித்திருக்கிறாராம்.

நாணயங்கள் மீது எந்த ராஜாவின் தலை இருக்கிறது.

இது "தலை போகிற" விஷயமல்லவே! நீரே நிதானமாய் கூர்ந்து கவனித்துச் சொல்லும்

ஆர். ஹநுமந்த ராவ் (ஆண்டர்ஸன் பேட்டை)

தமிழ்ப் படங்கள் பலவற்றில் யமதர்ம ராஜனைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றிலாவது அவருக்கு மனைவி இருப்பதாகக் காட்டவில்லை. உண்மையில் யமதர்மனுக்கு மனைவி உண்டா?

எல்லோரது உயிரையும் வாங்கும் யமதர்மனின் 'உயிரை வாங்க' ஒரு மனைவி இருக்க வேண்டியது அவசியந்தான்!

பி. கே. சின்னத் தம்பி (இலங்கை)

உங்கள் ஆபீசுக்கும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் எத்தனை சங்கிலி தூரம்?

எத்தனை மைல் போவதற்குள் நீர் ஒரு சங்கிலியை அறுப்பீர் என்பதைப் பொருத்திருக்கிறது இந்த விஷயம்!

டி. ஸ்ரீநிவாஸன் (கோயமுத்தூர்)

சென்னையிலுள்ள சினிமா நக்ஷத்திரங்கள் கோடை வெய்யிலில் அவஸ்தைப் படுகிறார்களல்லவா?

நிறைய "விசிறி"களை உடைய அவர்கள் ஏனய்யா சிரமப்படுகிறார்கள்!

"ராஜா சேது" (மாத்தளை)

எங்கள் ஊரில்.........தியேட்டரின் ஆசனங்களில் போய் உட்காரவேண்டியதுதான் தாமதம், ஏராளமான மூட்டைப் பூச்சிகள் ஒரேயடியாய்க் கடிக்கின்றன. இதைத் தடுக்க ஒரு யோசனை சொல்லும்.

ஏராளமான மூட்டைப் பூச்சிகள்-அதுவும் ஏக காலத்தில் கடிப்பதை சகித்துக் கொள்ள முடியாதுதான். ஆகையால் டிக்கெட் வாங்குவதற்கு ஏற்படுத்தும் "க்யூ ஸிஸ்ட"த்தை இவைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்!

சிறையிலிருந்து திரும்பிய மகனை (ஸ்ரீநிவாஸராவ்) பெற்றோர்கள் (சாமா, ராஜலக்ஷ்மி) வரவேற்கும் இக் காட்சியை "ஜீவ ஜோதி"யில் காணலாம். வெறிக்கப் பார்க்கிறவர்தான் வேலைக்காரனும்த் தோன்றும் எம். எல். பதி.

செய்திப் படங்கள்



பக்விஸ் அல்ல; "பக்த
ஜனா"வில் நாகய்யா

" தீபாவளி
நமஸ்காரங்கள் "
" நன அமராவதி "யில்
பி. எஸ். சரோஜா

ஆசீர்வதியுங்கள்"
'பக்த ஜனா"வில்
சாந்தகுமாரி



இடது பக்கம்—"தன அமராவதி"யில்
தோன்றும் பிரதம ஜோடி (குமரேசன், சரோஜா)
வலது பக்கம்—"பில்ஹணன்" படத்தின்
காதலர்கள் (டி. கே. ஷண்முகம், எம். எஸ். திரௌபதி)

●

இடது பக்கம்—
ஏ. வி. எம்.
தயாரித்துவரும்
"வேதாள உலக"த்தில்
மஹாலிங்கமும்
(யோகம்) மங்களமும்

●

"கஞ்சனி"ல் தோன்றும்
ஹாஸ்ய ஜோடி.
எம். என். நம்பியார்
எம். எஸ். பாக்யம்

கே. சகோதரர்கள் நடிக்கும்
"பில்ஹணன்"க்
கதாநாயகி
எம். எஸ். திரௌபதி

கன்னூ பில்ம்ஸின்
“திருமழிசை ஆழ்வார்”ல்
குமாரி ரஸ்சவதி

சந்திரலேகா பிலிம்ஸார் தயாரித்துவரும் "அம்பிகாதேவி" தமிழ்ப் படத்தில் (சபாபதி புகழ்) பத்மாவும், (ஆண்வேஷத்தில்) எம்.வி. ராஜம்மாவும்.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

"மக்களுக்கு பாட்டைப் போல உத்சாக மூட்டுவது வேறொன்றுமில்லை. எனக்கு மட்டும் சுப்புலக்ஷ்மியைப் போல பாடவந்தால், அதோடு எனக்கு இருப்பதாக நீங்கள் கூறும் குணங்களுமிருந்தால் நான் உலகத்தையே ஆளுவேன்" —என்று ராஜாஜி எட்டயபுரம் பாரதி மண்டபத் திறப்பு விழாவில் கூறினாராம்.

இதைப் படித்த ஒரு பட முதலாளி, "இப்படியான பாட்டு மட்டும் ராஜாஜிக்கு இருந்தால், நான் அவரை நாரதராக நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்க மாட்டேனா?" என்று கேட்கிறார்.

*   *   *

•சென்ற "ஊசி"யில் பதின் மூன்றும் நம்பரைப் பற்றி எழுதி யிருந்ததில், '8+5' என்று ஜூபிடர் பிக்சர்ஸார் விளம்பரப் படுத்தி இருப்பது சம்பந்தமாக குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அக்குறிப்பு வெளியான சில தினங்களுக் கெல்லாம் பதின்மூன்றிலிருந்து ஒன்றைக் குறைக்கும்படியான சம்பவம் நடந்து விட்டது. அவர்கள் "விப்ரநாராயணா"வை எடுக்கப் போவதில்லையாம்.

*   *   *

இப்பொழுது ஜூபிடரின் விளம்பரம் '8+4' ஆக வருமா அல்லது '7+5' ஆக வருமா என்று பொறுத்துப் பார்த்தால்தான் தெரியும். ஏனெனில் 8ம் நம்பர் முகம்மதியர்களுக்கு ஆகாத நம்பராம். ஜூபிடரின் பாகஸ்தரான மொய்தீன் ஒரு முகம்மதியராயிற்றே!

பதின்மூன்றும் நம்பர் அதிருஷ்டமா துரதிருஷ்டமா என்று ஆராயப் புகுந்து நான் எழுதிய செய்தியிலேயே துரதிருஷ்டம் புகுந்து விட்டிருக்கிறது. சென்ற "ஊசி"யில், "பதின்மூன்றும் நம்பர் பஸ்ஸிலே சென்று வந்ததனால் தானோ என்னவோ எனக்கு வரவேண்டிய சம்பள பாக்கி வரவில்லை" என்று எழுதி யிருந்தேன். எனக்கு சம்பளம் வரவில்லை என்று எழுதியிருந்ததைக் கவனியாது, "குண்டூசி" ஆசிரியருக்குத்தான் சம்பளம் வரவில்லை என்று பலர் நினைத்துவிட்டார்கள். இந்த துரதிருஷ்டம் எப்படி?

*   *   *

"நகைச்சுவை அரசு" என்றோ "நகைச்சுவை மன்னன்" என்றோ கூறினால் என். எஸ். கிருஷ்ணனின் பெயர்தான் நம் நினைவிற்கு வரும். ஆனால் இதே பட்டப் பெயரைக் கொண்ட இன்னொருவர்கூட இருக்கிறார் என்பது சமீபத்தில் ஒரு பத்திரிகையில் வெளியான விளம்பரத்திலிருந்து தெரிகிறது. "நகைச்சுவை மன்னன் சுகி" என்று அந்த விளம்பரத்தில் கண்டிருந்தது.

*   *   *

ஒரே நாட்டில் இரண்டு மன்னர்கள் இருப்பது நல்லதல்ல. ஆகையால் "பொதுஜன வோட்" எடுத்து ஒருவரை "சக்கரவர்த்தி"யாகச் செய்து

வடலாம். அப்படிச் செய்யாத வரையில் இவ்விரு மன்னர்களிடையே நகைச்சுவை-"பாகிஸ்தான்" ஆகாமலிருந்தால் சரி!

* * *

ஒருவருடைய நடிப்பை, நாம் நாடகத்திலோ அல்லது சினிமாவிலோ முழுதும் பார்த்த பின்னர், அக்குறிப்பிட்ட நடிகர், அல்லது நடிகையின் நடிப்பைப் பற்றி அபிப்பிராயம் கூறுவது தான் நியாயம். ஆனால் இந்த நியாயத்தை மீறி, வரப்போகும் ஒரு படத்தில், ஒரு குறிப்பிட்ட நபருடைய நடிப்பைப் பற்றி, முன் கூட்டியே அபிப்பிராயம் கூறினால் அது ஒரு அதிசயமான விஷயம் தானே? இவ்வித அதிசயச் செயலைப் புரிந்தவர்கள் லக்ஸ் டாய்லட் சோப் கம்பெனியார் தான். அவர்களது சமீப விளம்பரத்திலுள்ள வாசகத்தைப் பாருங்கள். "முபாரக் பிக்சர்ஸாரின் பில்ஹணு என்ற சரித்திர சம்பந்தமான படத்தில், ஏ. ஆர். சகுந்தலா தோன்றுகிறார். இப்படத்தில் அவரது நடிப்பு மிக உயரிய ரகத்தைச் சேர்ந்ததாகும்" என்பது தான். ஆகவே இனி இக்கம்பெனிக்காரர்கள் ஒன்று செய்யலாம். தங்கள் விளம்பரங்களில், "உங்கள் எதிர்காலப் பலன் இலவசமாகச் சொல்லப்படும். நீங்கள் 'லக்ஸ்' சோப்பை உபயோகிப்பதாக சொன்னால் போதும்" என்ற வரிகளையும் சேர்த்து வெளியிடலாம்!

* * *

பத்திரிகைகளில் ஒரு சிலர் பேபி கமலா என்று எழுதுகின்றனர். வேறு சிலர் குமாரி கமலா என்று எழுதுகின்றனர். இதெல்லாம் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் ஒரு மாத வெளியீட்டின் விமர்சனத்தில், அதன் ஆசிரியர், "குமாரி பேபி கமலாவின் அபிநயம் ஒன்றுதான் படம் பார்ப்பவர்களுக்கு சற்று ஆறுதல் அளிக்கிறது" என்று எழுதியிருக்கிறார். கடைசியாகக் குறிப்பிட்ட ஆசிரியரை நாம் அதி புத்திசாலி என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அவர் எழுதியிருப்பதில், 'குமாரி', 'பேபி'—இந்த இரண்டில் எது நமக்குப் பிடிக்க வில்லையோ அதை அடித்து விடலாமல்லவா?

* * *

சில பத்திரிகைகள் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி பாராட்டி எழுதும் போது, "முதன் முதலாகச் செய்தார்கள்" என்று முன் யோசனையில்லாமல் எழுதி விடுகின்றன. இது எவ்வளவு தவறானது என்பதை அவர்களும் உணருவதில்லை. மற்றவர்களும் திருத்துவதில்லை. தற்சமயம் ஜெமினி "மிஸ் மாலினி" யுடன் காட்டப்பட்டு வருகிற "கார்ட்டூனை"ப் பற்றி பத்திரிகைகள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றன:

"மிஸ் மாலினியுடன் காட்டப்படும் சினிமாக் கதம்பம் என்னும் கார்ட்டூன் படம் இந்தியாவிலேயே முதல் முயற்சி. எனவே பாராட்டவும் வேண்டும்; பார்க்கவும் வேண்டும்."

—ஒரு பழைய சினிமாப் பத்திரிகை

"இப்படத்துடன் சேர்ந்தாற்போல் காட்டப் படுகிறது சினிமா கதம்பம் கார்ட்டூன். படப்பிடிப்பின் இத்துறையிலே இந்தியாவிலேயே முதன் முதலாக ஜெமினி தான் இறங்கியுள்ளது."

—வயது மிக்க தினசரிப் பத்திரிகை

ஜெமினியின் வெற்றி—"இந்தியாவிலே தயாரிக்கப் பட்ட முதல் கார்ட்டூன் படம் இதுதான்"

—பிரபல தினசரிப் பத்திரிகை

"இக் கதையின் முன்பு, சினிமா கதம்பம் என்ற பெயருடன் இந்தியாவிலேயே முதன் முதலாக ஜெமினியார் பிடிக்க முன் வந்த கார்ட்டூன் படம் காட்டப் படுகிறது"

—திருச்சி வாரப் பதிப்பு

ஜெமினியின் "சினிமாக் கதம்பம் இந்தியாவிலே தயாரிக்கப் பட்ட முதல் கார்ட்டூன் படம் அல்ல.

இந்தியாவில் தயாரிக்கப் பட்ட முதல் கார்ட்டூன் படம் **ஜம்பு காக்கா** என்பதாகும். இல்லா விட்டால், "தென்னிந்தியாவில் முதன் முதலாக தயாரிக்கப் பட்ட கார்ட்டூன் படம்" என்று ஜெமினி எதற்காக பக்குவமாய் விளம்பரம் செய்யவேண்டும்? நிற்க, தென்னிந்தியாவிலேயும் மாடர்ன் தியேட்டர்ஸார் இம முயற்சியில் பத்து வருஷங்களுக்கு முன்பே இறங்கினர்கள். அவர்களது **பத்ம ஜோதி** படத்தின் ஆரம்பத்தில், ஒரு வினாடி நேரம் அப்படத்தின் நடிகை பத்மாவின் முக அசைப்பைக் காட்டி யிருந்தார்கள். ஆனால் அதை 'முயற்சி" என்று சொல்லலாமே தவிர "படம்" என்று சொல்வதற்கில்லை என்பது உண்மை தான்.

* * *

பத்திரிகைகள் "முதல்" தவறு செய்வது இதுதான் முதல் தடவை என்று நினைக்கிறீர்களா? இல்லை. சமீபத்தில் ஒரு பிரபல மாத சினிமாப் பத்திரிகை வெளியிட்டிருந்த 'பேபி கமலா'வின் வாழ்க்கை வரலாற்றில், "பேபி கமலா நடித்த முதல் தமிழ்ப் படம் **ஜகதலப்ரதாபன்**" என்று எழுதியிருக்கிறது. மற்ற பத்திரிகைகளும் இப்படியே எழுதி வருகின்றன. ஆனால், பேபி கமலா நடித்த முதல் தமிழ்ப் படம் **வாலிபர் சங்கம்** என்பதை இந்த ஆசிரியர்கள் இனியாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

* * *

இன்னொரு சினிமா ஆசிரியர் எழுதியிருந்தார்: "மங்கையர்க்கரசியில் சின்னப்பாவும் கண்ணாம்பாவும் சேர்ந்து நடிக்கிறார்கள். கண்ணகிக்குப் பிறகு இவர்கள் சேர்ந்து நடிப்பது இது தான் முதல் தடவை" என்று. இந்த ஆசிரியரின் "பொன் மொழி"கள் உண்மையா யிருக்க வேண்டுமானால் நாம் "மஹா மாயா", "ஹரிச்சந்திரா", "துளஸி ஜலந்தர்" ஆகிய படங்களை அடியோடு மறந்து விட வேண்டும்!

* * *

இது போல இந்த முதல் விஷயத்தில் பல பத்திரிகைகள், பல தடவைகளில் தங்கள் "தயாள புத்தியை"க் காட்டி யிருக்கின்றன! இருந்த போதிலும் "இந்தியாவிலேயே முதன் முதலாக இந்தத் தவறைச் செய்த பத்திரிகை எது?" என்று கேட்டால், எனக்குத் தெரியாது!

T. A. S. ரத்தினம் பிரதர்ஸ்

பவுன் நிறமுள்ள

பட்டணம் பொடி

உயர்தர வாசனையில் கலந்த

பன்னீர் புகையிலை, சவரன் பாக்குத்தூள்

கிடைக்கும் இடம்:

ஏஜெண்ட்:—A. V. பொன்னையா நாடார்

மலைவாசல், திருச்சி.

தீபாவளிப் படங்கள்

தீபாவளித் திருநாளன்று சினிமா ரசிகர்களுக்கு நல்ல விருந்து என்று சொல்லக்கூடியவாறு படங்கள் வெளிவந்துள்ளன. இவை பக்ஷி ராஜாவின் "கன்னிகா," ஜூபிடரின் "கஞ்சன்," அம்பிகா பில்ம்ஸின் "தன அமராவதி," கமல் புரொடக்ஷன்ஸின் "மகாத்மா உதங்கர்," சுதர்சன் டிரேடிங் கார்ப்பொரேஷனின் "சிகாமணி," ஏ. வி. எம். ஸ்டுடியோ தயாரிப்பான "ராம ராஜ்யம்," முதலியவையாகும்.

"கன்னிகா"வை சிறந்த முறையில் தயாரித்திருக்கிறாராம் ஸ்ரீ ராமுலு நாயுடு. "ஆர்யமாலா," "சிவகவி," "ஜகதலப்ரதாபன்," போன்ற படங்களை ரசிகர்களுக்கு அளித்த அதே ஸ்ரீராமுலு நாயுடு நீண்ட நாட்களுக்குப் பிறகு புத்துணர்ச்சியுடன் இப்படத்தை அளிக்கிறார். "ஜகதலப்ரதாப"னில் ரசிகர்களை வசியப்படுத்திய எம். எஸ். சரோஜினிதான் இதிலே கதாநாயகியாக வருகிறார். புதுமுகம் தேவை என்ற ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, டி. ஈ. வரதன் என்ற பட்டதாரியை கதா நாயகனாகப் போட்டு அறிமுகப்படுத்துகிறார். சுவாரஸ்யமுள்ள இக்கதையில் ஹாஸ்ய விருந்தளிக்க கிருஷ்ணன், மதுரம் இருக்கின்றனர். விடுதலைக்குப் பிறகு கிருஷ்ணன் இரண்டாவதாக நடித்த படம். கதைக்கேற்றவாறு பொருத்தமாக அமைந்திருக்கிறதாம் இவரது ஹாஸ்யம். சமீப காலங்களில் நடன ரசிகர்களை வசியப்படுத்திய திருவிதாங்கூர் சகோதரிகளான பத்மினி, லலிதாவும் குட்டி நடன நக்ஷத்திரமான ஹேம மாலினியும் இதில் ஆடுகிறார்கள். இவ்வளவும் போதாதென்று காளி ரத்தினம் தமது கைச் சரக்கை இதில் காட்டி யிருக்கிறாராம். டி. பால சுப்ரமணியம், எம். ஆர். சந்தான லக்ஷ்மி போன்ற அனுபவம் வாய்ந்தவர்களும் நடித்திருக்கிறார்கள். மொத்தத்தில் விருவிருப்புடன் கூடிய பொழுது போக்குக்குகந்த படமாகத் தயாரித்திருக்கிறாராம் நாயுடுகாரு. ரசிகர்கள்பாடு வேட்டைதான். வெளியூர்களிலும் சென்னை பிரபாத்திலும் இப்படம் நடைபெற்று வருகிறது.

* * *

சமூகப் படம் வேண்டும் என்று ஒரு சாரார் அபிப்பிராயப்படுவதற்கேற்ப ஜூபிடர் பிக்சர்சார் "கஞ்சனை" தீபாவளியன்று ஊர் சுற்ற விட்டிருக்கிறார்கள். லோபியின் காதலைத் தழுவிய இக்கதையை சுவாரஸ்ய மிக்கவாறு கோவை அய்யாமுத்துவும் டி. ஆர். கோபுவும் டைரெக்ட் செய்திருக்கிறார்கள். "கஞ்சனில்" எஸ். வி. சுப்பையா நன்கு நடித்திருக்கிறாராம். இரண்டு 'செட்' காதலர்களை வைத்துக்கொண்டு கதை பின்னப்பட்டிருக்கிறதாம். "ராஜகுமாரி"யில் நடித்த சிவபாக்யம் சக்கை போடு போட்டிருக்கிறாராம். மற்றும் "வால்மீகி"யில் விஷ்ணுவாக வந்த நரசிம்ம பாரதி, "வித்யாபதி"யில் மலையாளம் பேசும் பெண்ணாக வந்த மாலதி, தங்கையாக வந்த கமலாதேவி (மாயா லோகத்தில் வருபவர்) முதலியவர்களும், நாடகமேடையில் நல்லபெயரை அடைந்தமுஸ்தாபா போன்றவர்களும் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து நடித்திருக்கிறார்களாம். தமிழ் நாட்டைப்பற்றிய பாட்டுவெகுநேர்த்தியாக அமைந்து விட்டதாம். அய்யாமுத்துவிற்கும் கோபுவிற்கும் "கஞ்சனுக்கு" வரும்பெயரில் பங்குண்டு. இப் படம் வெளியூர்களில் திரையிடப்படுகிறது.

* * *

மற்றொரு வெளியீடு அம்பிகா பில்ம்ஸின் "தன அமராவதி." "மதன காமராஜன்," "பூலோக ரம்பை" போன்ற பொது மக்கள் விரும்பிய படத்திற்கு கதை வசனம் எழுதிய அதே பி. எஸ். ராமையா இப்படத்திற்கும் வசனம் எழுதி டைரெக்டும் செய்திருக்கிறார். சலிப்பே ஏற்படாதவாறு கதைப் போக்கை அமைத்திருக்கிறார். எதை மறந்தாலும் இதில் மயில் மாணிக்கம் செட்டியாராக வரும் "புளி மூட்டை" ராமஸ்வாமியை யாரும் மறக்க மாட்டார்கள். இப்படத்தில் ஒரு குண விசேஷ நடிகனின் திறமையை அவர் வெளிப்படுத்தி யிருக்கிறார். பி. எஸ். சரோஜாவும் நன்கு நடித்திருக்கிறார். கரும்பினியாக வரும் வடிவாம்பாளின் பாட்டு செவிக்கொரு அமுது. வைக்கம் சரஸ்வதியின் பின்னணி பாடல்களும், குமாரி ராஜத்தின் பாட்டுகளும் காதிற்கினிமையாக இருக்கின்றன.

ரத்னம் செட்டியாராக வரும் சந்திரபாபுவின் ஹாஸ்யம், பொன்னம்பலமாக வரும் ஜகதீசனின் சாயை, பேச்சு

முதலியவைகளைக் கண்டு மகிழ்ந்து பிரமித்துப் போவீர்கள். ராமையாவின் வசனம்படத்திற்கு சோபை அளிக்கிறது.

* * *

"புராணப் படம் என்றால் இப்படியல்லவோ இருக்க வேண்டும்" என்று பொதுஜனப் பாராட்டுதலைப் பெற்ற "ராம் ராஜ்யா" ஹிந்திப் படத்தில் தமிழ் வசனங்களை ஒட்டி, ஏவி. எம். ஸ்டுடியோக்காரர்கள் தயாரித்திருக்கிறார்கள். பொது மக்களின் பாராட்டுதலைப் பெற்ற ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள், டி. எஸ். பகவதி, பி. ஜி. வெங்கடேசன், கே. வி. ஜானகி முதலியவர்களின் பாடல்கள், வசனங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள இப்படம் தீபாவளியன்று காட்சியளிக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஸ்ரீ. மெய்யப்பா, "ராம ராஜ்யா"வைத் தமிழ்ப்படுத்தி வெளியிடுவதை ஒரு தமிழ்ப் பட சேவை என்று சொல்ல வேண்டும். இது போன்ற ஒரு உயர்ந்த தமிழ்ப் படத்தை தமிழ் ரஸிகர்கள் எல்லோரும் பார்ப்பதால், அவர்களுடைய கலா ரஸனை அதிகரிக்கும், ஆபாசப் படங்கள் மீது வெறுப்பும் தோன்றும் என்பது நிச்சயம்.

* * *

"மகாத்மா உதங்க"ரும் தீபாவளியன்று சில ஊர்களில் காட்சியளிப்பார் என்று சொல்லப்படுகிறது. இப்படத்தை டைரெக்ட் செய்யும் ஸ்ரீ. பட்டு ஐயர் பல வருஷ காலம் அனுபவம் பெற்ற நடிகராவார். இதிலே இவரும் நடித்திருக்கிறார். சீனுவின் பாட்டுகள் நன்றாக இருக்கின்றனவாம். பின்னணிப் பாடல்கள் ஸ்ரீமதி பட்டம்மாளுடையவையாம். குமாரி கமலாவின் நடனங்கள் இதில் விசேஷ அம்சம் என்றால் கேட்கவா வேண்டும்?

மொத்தத்தில் கூறப் போனால் இவ்வருஷ தீபாவளி வெளியீடுகள் சென்ற சில வருஷ தீபாவளி வெளியீடுகளைவிட ரசிகர்களுக்குப் பிடித்ததாகவும், தரம் உயர்ந்ததாகவும் இருப்பது சந்தோஷிக்கத்தக்க விஷயமாகும்.

முதலாளி நடிகன்

வி. எஸ். வெங்கடேசன்

கோபாலசுந்திரம் ஒரு பிரபல படக் கம்பெனியின் முதலாளி. அவனுடைய விடாமுயற்சியாலும், சாமர்த்தியத்தாலும் அக்கம்பெனி அது ஆரம்பித்துச் சில வருடங்களிலேயே பிரபலமடைந்தது. பெயர் தெரியாது இருந்தவர்களையெல்லாம் அவன் நக்ஷத்திரங்களாக்கினான். ஆனால் திடீரென்று கோபாலசுந்திரம் கம்பெனியை விட்டுவிட்டு, நடிகனாக மாறிவிட்டான் என்பதைக் கேட்டபொழுது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவனுக்குப் பணம் சேரச்சேர அவன் எதுவேண்டுமானாலும் செய்வான் என்றும் நினைத்தேன். நண்பன் என்ற முறையில் அன்றே கோபாலசுந்திரத்தைக்கண்டு, அவன் செய்யத் தீர்மானித்திருப்பதை உடனே கைவிடும்படி கூறவேண்டும் என்று அவன் வீட்டிற்குச் சென்றேன்.

நான் சென்ற சமயம் கோபாலசுந்திரம் அவன் மனைவியுடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் "எங்கே ரொம்ப நாளாக்கப்புறம்? சௌக்யந்தானே?" என்று கேட்டான்.

நான் முகத்தைச் சுளித்துக்கொண்டு "சௌக்யந்தான்" என்றேன்.

"உட்கார். ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்? என்ன விசேஷம்?"

"விசேஷமா? உனக்கு ஏன் இப்படி புத்தி மாறிவிட்டது?"

அவன் ஆச்சரியப்படவே இல்லை. என்னிடமிருந்து இந்தமாதிரி கேள்வி வரும் என்று எதிர்பார்த்தவன் போலவே காணப்பட்டான். அவன் சிரித்துக்கொண்டே "எதைச் சொல்கிறாய் நான் நடிக்க ஒப்புக்கொண்டதையா?" என்றான்.

"ஆமாம். அதைத்தான் சொல்கிறேன்"

கோபாலசுந்திரம் முன்போலவே சிரித்துக்கொண்டு, உள்ளே சென்றிருந்த மனைவியை அழைத்து, என்னைச் சுட்டிக் காட்டியபடி, "இதோ பார்த்தாயா, இன்னொரு பைத்தியம். எனக்குப் புத்தி மாறிவிட்டதாம். இவனுக்குப் புத்தி அப்படியே இருக்கிறதாம்" என்றான்.

எனக்கு ஆத்திரமாகத்தான் இருந்தது. அதை எந்த முறையில் காண்பிப்பது என்று யோசித்தேன். மேலும் அவன் போடும் புதிரும் எனக்குப் புரியவில்லை. வேறு ஏதாவது திட்டம் போட்டு இம்மாதிரி அவன் வேலை செய்கிறானா என்பதும் எனக்குத் தெரியாது. "அது சரி. நான் பைத்தியமாகவே இருக்கிறேன். உன் கதையைச் சொல்" என்று கேட்டேன்.

"இதோ பார். நான் நடிகனாக மாறியதற்கு நீ மாத்திரமல்ல ஆச்சரியப்படுவது, எத்தனையோ பேர் திடுக்கிட்டார்கள். ஆனால் ஒருவருக்காவது உண்மை தெரியவே தெரியாது. ஏன்? நான் நடிகனாக மாறுவேன் என்று சொப்பனம் கூட கண்டதில்லை. நடிகனாக மாறினால் எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன என்பதைப் போனமாதம்தான் உணர்ந்தேன். அதை உபதேசித்தவன் யார் தெரியுமா? என்னால் நக்ஷத்திரமாக்கப்பட்ட சீதாபதியே தான்!"

எனக்கு மேலும் ஆச்சரியமாக இருந்தது. நான் விரிந்த கண்களால் அவனைப் பார்த்துக்கொண்டே, "அவனா உன்னை நடிகனாகச் சொன்னான்?" என்றேன்.

"நடந்த விஷயம் பூராவையும் சொன்னால்தான் உனக்குப் புரியும். நான் செய்த முடிவையும் நீ குற்றம் கூறமாட்டாய். முன்பெல்லாம் ஒரு படம் பிடிக்க ஐம்பதாயிரம், அறுபதாயிரம் ரூபாய் இருந்தால் போதும். நடிகர்களுக்கும் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் அதுவே அவர்களுக்கு அதிகமாக இருக்கும். விநியோகஸ்தர்களும் படம் பிடிப்பதாக விளம்பரம் செய்யப்பட்டதைக் கண்டதுமே, வந்து பணத்தை முன்னதாகவே கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். அதனால் கஷ்டமில்லாமல்

ஒரு படத்தைப் பிடித்து முடிக்க முடிந்தது

"நம் நாட்டில் அப்பொழுதுதான் பேசும் படங்கள் ஆரம்ப நிலையில் இருந்ததால் ஜனங்களும் என்ன படமாக இருந்தாலும் எந்த நடிகர்கள் நடித்தாலும் படத்தைப் பார்க்கக் குழுமிவிடுவார்கள். படத்தின் தரம், நடிகர்களின் திறமை முதலியவைகள் ஒன்றையும் ஜனங்கள் கவனிப்பதே இல்லை. நம் நாட்டுப் படம் என்ற உணர்ச்சியில் அவர்கள் ஆதரவுகாட்டி வந்தனர். அவர்கள் அப்படியிருக்க நான் என் இஷ்டம்போல் படம் பிடித்து, எனக்கு இஷ்டமான நடிகர்களை நடிக்கச் செய்து படத்தை வெளியிட்டு வந்தேன்."

"ஆனால் காலம் மாறிக்கொண்டே வந்தது. முதலில் நடிகர்கள் அதிகச் சம்பளம் கோரினர். ஆயிரம் இரண்டாயிரத்திலிருந்து லட்சத்திற்கு அவர்கள் மதிப்பு உயர்ந்துவிட்டது. ஸ்டுடியோக்களின் வாடகையும் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகியது. ஜனங்களின் மனோபாவமும் மாறி, இன்ன நடிகர் நடித்த படமாக இருந்தால் தான் பார்ப்பது என்ற நிலைமை ஏற்பட்டது.

"இம்மாதிரி சில காலம் சென்றதும், புதுமாதிரிப் படங்களையும், பழைய நடிகர்களுடன் புதிய முகங்களும் நடித்தால்தான் ஜனங்கள் பார்ப்பார்கள் என்ற நிலையும் ஏற்பட்டது.

"இவ்வித காரணங்களால்தான் நான் ஒரு புது மாதிரியான படம் பிடிக்கத் திட்டம் போட்டேன். படத்தின் பெயர் "விசித்திர மாப்பிள்ளை". ஜனங்களின் ஆசைக்கேற்ப, வருவாயும் உத்தேசித்து முன்பே என்னால் பிரபலமாயிருந்த சிதாபதியையும், புது முகத்திற்காக எனக்குத் தூரபந்துவான ஒரு பெண்ணையும் அப்படத்திற்கு ஒப்பந்தம் செய்தேன். பெண் நல்ல முகவெட்டுடன் கொஞ்சம் பாடக்கூடியவளாகவும் இருந்தாள். நடிப்பு விஷயத்தில் அவளுக்குப் பரிச்சயம் இல்லாவிட்டாலும் சொல்லிக்கொடுத்துச் சரிக்கட்டிவிடலாம் என்ற நம்பிக்கையிலேயே அவளை ஏற்பாடு செய்தேன். இந்த என் முடிவை சிதாபதி முதலிலேயே எதிர்த்தான். ஒன்றும் தெரியாதவளுடன் தான் நடிப்பதால் தன் பெயர் கெட்டுவிடும் என்றும் கூறினான். நான் அவனிடம் 'உன் பெயரை அவள் என்ன கெடுப்பது? நீ நடிப்பதற்கேற்பத்தானே உனக்குப் பெயர் வரப்போகிறது?' என்று சொல்லி சமாதானப்படுத்தினேன்.

"அவன் சொல்லிக்கொண்டிருப்பதற்கேற்ப என் கஷ்டகாலமும் சேர்ந்துகொண்டது. முன்பு விளம்பரத்தைக் கண்டு வந்து குவிந்த விநியோகஸ்தர்கள், என் கைப்பட கடிதம் எழுதியும் வரவில்லை. அதற்குப் பதிலாக படத்தை முடித்துக் காட்டினால், பிறகு இஷ்டமிருந்தால் தாங்கள் விநியோகத்திற்கு எடுத்துக்கொள்வதாக எழுதிவிட்டனர். நான் விநியோகஸ்தர்களை நம்பி நடிகர்களுக்கு முன்பணமாகவும், ஆடைகள், மற்றும் படத்திற்குத் தேவையானவைகளை வாங்குவதற்குமாக அதிகப் பணத்தை செலவழித்துவிட்டேன். கையிலிருந்த பணத்தைக் கொண்டு இரண்டாயிரம் அடி படத்தையும் எடுத்தேன். மேலும் படமெடுக்கப் பணமில்லை. எனக்குத் தெரிந்தவர்கள் பலரிடமும் போய்க் கேட்டேன். எவரும் என்மேல் நம்பிக்கை கொண்டு பணம் கொடுக்க முன்வரவில்லை. அத்துடன் சிதாபதியும் மற்ற நடிகர்களும் தங்களுக்கு ஒப்பந்தப்படி சேரவேண்டிய பணத்திற்கு கெட்டி கட்டினார்கள்."

நான் இடைமறித்து, "சிதாபதியும் மற்றவர்களும் படம் முடிந்த பிறகு பணம் வாங்கிக்கொள்ள மாட்டார்களா? இவ்வளவு நாள் உன்னிடமிருந்ததற்கு இதுகூடவா செய்யமாட்டார்கள்?" என்று கேட்டேன்.

கோபாலசுந்தரம் ஒரு பெருமூச்சுவிட்டான். பிறகு தயங்கிய குரலில் சொன்னான்: "மற்றவர்கள் அப்படியில்லை. அவர்கள் நான் சொன்னால் கேட்பார்கள். ஆனால் சிதாபதி இருக்கிறானே, அவன் எப்படிப்பட்டவன்

குஹன் பிக்சர்ஸின் "ஜம்பம்" படத்தில் ஒரு காட்சி

பார்க்கிற பார்வையிலேயே ஆளை எரித்துவிடுவார் போல் தோன்றுகிறதல்லவா? "தேவதாஸி"யில் கிருஷ்ணனின் தோற்றம் இது.

தெரியுமா? நயவஞ்சகன். என் கையில் பணம் இல்லாத சமயம் பார்த்து, தனக்குப் பணம் வேண்டும் என்று சண்டித்தனம் செய்வதுடன், தன் சக நடிகர்களையும் தூண்டிவிடுவான்.

"அன்றும் அப்படித்தான் செய்தான். அன்று அவன் செய்ததை நினைத்தால் இப்பொழுதும் குலை நடுக்கம் எடுக்கிறது. பெரிய ராஜதந்திரிகள் தாங்கள் பதவிக்கு வர, பதவியில் உள்ளவர்களை கவிழ்க்க என்ன தந்திரங்களைக் கையாளுவார்களோ அதையேதான் அவனும் கையாண்டான்.

"அன்று அதிகாலையிலேயே ஒருவன் வருவதாகச் சொல்லியிருந்தான். அவனைக் காணவேண்டும், காரியத்தை உடனே முடித்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில், அதிகாலையிலேயே, காபிகூடச் சாப்பிடாமல் கம்பெனிக்குப் போயிருந்தேன். வெகு நேரமாகியது. வருகிறேன் என்றவனே வரவில்லை பசியோ என்னை வாட்டிக் கொண்டிருந்தது. அந்நிலையில் நான் வந்திருக்கிறேன் என்பதை அறிந்த சிதாபதி முதலில் சக நடிகர்களை ஏவி, என்னைப் பணம் கேட்கச் சொன்னான். அவர்களும் அவன் பேச்சைக் கேட்டு ஒருவர்பின் ஒருவராக வந்தனர், ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லி அனுப்பினேன் என் பேச்சில் நம்பிக்கை வைத்து அவர்கள் சென்றுவிட்டனர். பிறகு சிதாபதி வந்தான். ஆனால் எல்லோரையும் போல் அவன் சாதாரணமாக வரவில்லை. தான் பெரிய நக்ஷத்திரம் என்ற மமதையில்—முன்பு நான் அவனுக்குச் செய்திருப்பவைகளை மறந்து—ஏளனமாகச் சிரித்துக்கொண்டே அறையினுள் வந்தான். அதே ஏளனச் சிரிப்புடன் என்னைப் பார்த்து, 'அதிகாலையிலேயே வந்திருக்கிறீர்களே. என்ன விசேஷம்? யாராவது வருகிறேன் என்றார்களோ?' என்று கேட்டான், அவன் கேள்வியில் அகம்பாவம் தொனித்தது.

"நான் சாவதானமாக அவனை உட்காரச் சொல்லிவிட்டு, 'ஆமாம் ஒருவர் வருகிறேன் என்றார். எப்படியும் இன்று காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டியதுதான்' என்றேன்.

"இது தினசரி நாடகம் தானே! எவனாவது வருவான். படம் முடிந்த பிறகு அதை விலைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்பான், ஏன் வீணாகப் பிரயாசைப் படுகிறீர்கள். பேசாமல் கம்பெனியை மூடி விட்டுப் போங்கள்' என்றான் ஏளனமாகச் சிதாபதி.

"எனக்குக் கோபம்தாங்கவில்லை. பசி ஒரு புறம். வருகிறேன் என்றவன் வராத ஆத்திரம் மற்றொரு புறம், அத்துடன் சிதாபதியின் எக்காளச் சொல்லும் சேரவே என் கோபம் எல்லை மீறியது. நான் வீணாக அவனுடன் சச்சரவு வைத்துக் கொள்ளப் பிரியப் படாமல், 'பேசாமல் போ சிதாபதி, ஏன் வீணாக வம்பளக்கிறாய்?' என்றேன்.

"நான் வம்பா பேசுகிறேன். நீங்கள் இதே மாதிரி எவனையாவது நம்பிக் காலங் கழிக்கிறீர்கள் என்று தானே சொல்லுகிறேன். உங்களால் எனக்கிருக்கும் பெயரே போய் விடும் போலிருக்கிறது!'

"நானா உன் பெயரைக் கெடுக்கிறேன்?'

"அவன் ஆத்திரமடைந்தான் 'இல்லாமல் என்ன? பிடிக்கிறேன் என்ற படத்தை இரண்டு வருடமாகப் பிடிக்காமலிருந்தால் என் பெயர் அப்படியே இருக்குமல்லவா?"

"நான் படம் பிடிக்க மாட்டேன் என்றா சொல்கிறேன். பணம் தானே யாரும் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்.

"எவன் உங்களுக்குப் பணம்கொடுப்பான்? பணம் கொடுப்பவனுக்கு

உங்கள் படத்தினால் பணம் திரும்பி வரும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டாமா? படத்தின் கதை புது மாதிரியாக இருப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் பணம் போடுபவனுக்கு ஆறுதலளிக்கும் முறையில் நடிகர்களையாவது போட்டால்தானே அவர்கள் துணிந்து பணம் கொடுப்பார்கள்?"

—"ஏன் நல்ல நடிகராகத் தானே போட்டிருக்கிறேன்? கதா நாயகனாக உன்னைப் போட்டிருக்கிறேன். மற்றபடி நமது கம்பெனியில் உள்ள பழைய நடிகர்களும் இதில் நடிக்கிறார்கள். இருப்பதெல்லாம் அவள் ஒருத்தி தானே புதிது!"

"அவள் ஒருத்தியினால்தான் எவனும் வரப் பயப்படுகிறான். முன்பே நான் சொன்னபடி நல்ல பெயர் வாங்கிய நடிகையாகப் போட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?"

"உன் பேச்சுப்படியே இருக்கட்டும். அவளைப் போட்டதற்குத் தான் எவனும் வரவில்லை. ஏன் உன் பெயர் போட்டதற்குக் கூட ஒருவனும் வர மாட்டேன் என்கிறான்?"

"அவளைப் போட்டதால் தான் என் பெயரும் எடுபட வில்லை"

நான் மேலும் ஆத்திர மடைந்தேன். "அவளைப்போல் ஒருத்தி உன்னுடன் நடிக்கக் கிடைத்தால் போதும்"

அவனும் கோபமடைந்தான். என்னையும் விட பலத்த குரலில் "என்னை அவ்வளவு கேவலமாக நினைத்து விட்டீர்களா? இத்தனை நாளும் மரியாதைக்காகப் பார்த்தேன். ஏதோ என்னை முன்னுக்குக் கொண்டு வந்தவர் என்ற முறையில் தணிந்து போய்க் கொண்டிருந்தேன். இனிமேல்........."
என்று பேச்சை நிறுத்தினான்.

அவன் அப்படிப் பேசியதால் என் கோபம் முன்னிலும் அதிகரித்தது. "இனிமேல் என்ன? என்ன செய்து விடுவாய்?" என்று நாற்காலியிலிருந்து எழுந்தேன்.

நான் கூச்சல் போட்டுப் பேசியதைக் கேட்டுக் கம்பெனியில் உள்ள அனைவரும் என் அறைக்கு வந்து விட்டனர். அவர்கள் என்னையும் சீதாபதியையும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.

"ஜம்பம்" தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி, குமார், சேதுராமன், அங்கமுத்து

சீதாபதியும் கோபமாக நாற்காலியி லிருந்து எழுந்து "செய்வதைச் செய் கிறேன். நீங்கள் படம்பிடித்தாலும் சரி, பிடிக்கா விட்டாலும் சரி. நான் அவளுடன் நடிக்க மாட்டேன்,' என்று மேஜை மீது குத்திப் பேசினான்.

"அவளுக்கு என்ன குறைச்சலாம்? பாட்டில்லையா? அழகில்லையா? உன் அழகுக்கு அவளை விட வேறு நக்ஷத்தி ரம் வேண்டுமோ?"

அவன் மேலும் கோபமடைந்து "என்னழகைப் பற்றிப்பேச நீ யார்? உனக்கு அவள் அழகாக இருந்தால் நீ அவளுடன் நடிக்கிறது தானே?" என்றான்.

"நான் நடித்தால் நீ பணம் கொடுத்து விடுவாய் அல்லவா?" என்று மேஜை இரண்டு படும்படிக் குத்தினேன்.

அவன் மேஜை மீது பலமாகத் தட்டி 'நீ நடிக்கிறேன் என்று இப்பொழுது சொல்லு. பணம் கொடுக்கிறேனா இல்லையா பார்? என்னையும் உன்னைப் போல் பஞ்சப் பயல் என்று நினைத்துக் கொண்டாயா?" என்றான்.

"நான் நடிக்கிறேன் என்றால் பணம் கொடுப்பாயா? உன்னால் முடியுமா?"

"முடியுமோ, முடியாதோ, அதைப் பற்றிஉனக்கென்ன அக்கறை. நீ நடிக் கிறேன் என்றுசொல். ஐந்தே நிமி ஷத்தில் பணம்கொடுக்கிறேன்"என்று வீராப்புப் பேசினான் சீதாபதி.

"நானும் அவன் கர்வத்தை அடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 'சரி' என்றேன், அவன் கோபத்தில் பிதற் றுகிறான் என்றே இப்படிச் சொன் னேன். ஆனால் நான் சரி என்று சொன்னதும் அவன் உடனே வெளி யே போய் ஐந்தே நிமிஷத்தில் பணத்துடன் திரும்பி வந்தான். நானும் விடாப் பிடியாக கோபத்தி லேயே ஒப்பந்தம் செய்து கொண்டு பணத்தைப் பெற்றுக் கொண்டேன்.

"என்னிடம் நடிப்பதற்காக அவன் பெற்றபணத்தைக் கொண்டே அவன் அன்று என் கம்பெனியை வாங்கிக் கொண்டான். கோபத்தில் சொன்ன படியே சீதாபதி என்னை விசித்திர மாப்பிள்ளைக்குக் கதா நாயகனாகப் போட்டு விட்டான்.

"நான் நடிக்கப் போகிறேன் என்ற செய்தி கேட்டு சிலர் ஏளனம் செய்த னர். சிலர் எனக்கு நடிக்க என்ன தெரியும் என்றும் கூறினர். இந்தக் காரணத்தால் பல படக் கம்பெனிக் காரர்கள் படப் பிடிப்பு நடக்கும் சமயம் வந்திருந்தனர், என் நடிப்பைக் கண்டு உடனே என்னைத் தங்கள் படங் களிலும் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

"படமெடுக்க திட்டமிட வேண்டும். விளம்பரம் செய்ய வேண்டும். வினி யோகஸ்தர்கள் கையை எதிர்பார்க்க வேண்டும், நடிக, நடிகர்கள் பணத் திற்கு வந்து தொந்திரவு செய்வார் களே என்று பயந்து பதுங்க வேண் டும்—இதெல்லாம் இப்பொழுது எனக் கில்லை. கூப்பிட்ட நேரத்தில் போக வேண்டும். நடிக்க வேண்டும். வீடு திரும்பவேண்டும். ஒரு கம்பெனி நடத் தினால் கூட இவ்வளவு பணம் எனக் குக் கிடைக்காது. அவ்வளவு முன் பணமாகவே கிடைத்திருக்கிறது. இப் பொழுது நீயே சொ[illegible]. நான் தெரிந்தோ, தெரியாமலோ செய்த முடிவு சரியா, தப்பா?" என்றான்.

ஒருவன் கவலையில்லாமல் காலம் தள்ளுவதை யார் தான் தப்பு என்று சொல்லுவார்கள்" நான் அவன் செய்த முடிவு மிகவும் உத்தமமானது என்று கூறிவிட்டு, என் வீட்டிற்குக் கிளம்பி னேன்.

டிஸம்பர் மாஸ

ஊசியில்

பி. எஸ்.

ஸ்ரீநிவாசராவ்

(வாழ்க்கை வர்ணனை)

*

"இச்சு—பிச்சு"

(தமிழ் ஸினேரியோ)

எஸ். டி. எஸ். யோகி

பொதுஜனம் பேசுகிறார்

துப்பாதே !

★1 சினிமாப் பார்க்கப் போவதென்றால் அதற்காக ஒரு தனி (அழுக்கு) ஆடையை அணிந்து கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வெளுத்த வேஷ்டி, சொக்காய்களுடன் போனால் திரும்பும்போது அவை வாணியனிடம் "சலவை"க்குப் போட்டவைகளைப் போலாகி விடுகின்றன. இது தரை மகா ஜனங்களின் அனுபவமாகும்.

முன்னதாக டிக்கெட்டை வாங்கிக் கொண்டு தியேட்டருக்குள் போகிறவர்கள், தங்களுக்கு முன்னால் யாரும் உட்கார்ந்து கொண்டு மறைக்கக் கூடாதென்பதற்காக தங்களுக்கு முன்னால் தாம்பூல எச்சிலைத் துப்பி வைக்கிறார்கள். என்ன அநாகரீகமான பழக்கம்! பிறகு, படம் ஆரம்பமான பின் இருட்டில் வருபவர்கள் இந்த எச்சில் மீது உட்கார்ந்து விடுகின்றனர். இதன் விளைவாக எச்சில் துப்பினவருக்கும், அதன் மீது உட்கார்ந்தவருக்கும், வாக்குவாதம் ஏற்பட்டு அடிதடி கூட ஏற்பட்டுவிடும். இவர்களது சண்டையால் மற்றவர்களும் படம் பார்ப்பது கஷ்டமாகிறது. இப்படி எங்கள் ஊர் தியேட்டரில் தினசரி நடக்கிறது.

தியேட்டர் நிர்வாகிகள் எச்சில் துப்புவதற்காக தொட்டிகளை வைத்திருக்கிறார்கள். அதில் துப்பிவிட்டு வந்தால் இந்த சங்கடங்களெல்லாம் ஏற்படாதல்லவா? கீழே எச்சில் துப்புபவர்களை தண்டிக்க தியேட்டர்காரர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டால் தியேட்டரில் குழப்பம் ஏற்படாமல் போகும்.

★ கே. எஸ். ஸ்ரீநிவாஸன்
சேலம்

கட்டணமும் வசதிகளும்

★2 சென்னை சர்க்கார் சினிமாவிற்காக வசூலிக்கப்படும் வரியை உயர்த்தியதும், தியேட்டர் முதலாளிகள் சினிமாக் கட்டணத்தை இருமடங்காக உயர்த்தி, அந்த வரிச்சுமையை பொதுமக்களின் தலையில் சுமத்தி வருகிறார்கள். ஏற்கனவே கொடுக்கப் பட்டுவந்த கட்டணத்திற்கே தியேட்டர்களில் போதிய வசதியில்லை என்று பொது மக்கள் குறைகூறிக் கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க கட்டணத்தை இருமடங்காக உயர்த்தியபின் வசதியின்மையை அவர்களால் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஆனால் பொது மக்கள் பலர் இவ்விஷயத்தில் அவ்வளவாக அக்கறை செலுத்தி இருப்பதாய்த் தெரியவில்லை. அவர்கள் ஏதேனும் கிளர்ச்சி செய்தால் தானே தூங்குகிற தியேட்டர் முதலாளிகளை விழிக்கச் செய்ய முடியும்? இந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். தியேட்டர் சீர்திருத்தக் கமிட்டியொன்றை அமைத்து, தியேட்டர்களில் போதிய சுகாதார வசதிகளும் மற்ற வசதிகளும் சரிவர உள்ளனவா என்றுபார்த்து, முதலாளிகளை வேண்டுவன செய்யும்படி தூண்டவேண்டும். இப்போது தியேட்டர்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தியேட்டர் பார்வையிடப்படுகிறது. ஆனால் தியேட்டர் முதலாளிகள் அந்தச் சமயங்களில் ஏதேனும் சில வசதிகளை தற்காலிகமாகச் செய்துவிட்டு அதிகாரிகளை ஏமாற்றி விடுகிறார்கள். ஆகவே இது விஷயத்தில் சென்னை சர்க்காரின் சம்பந்தப் பட்ட மந்திரி உடனே தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவாரென நம்புகிறேன்.

—ஹ. லக்ஷ்மணன்,
நெல்லை.

புது முகங்கள்

★3 ஒரு கலை நன்கு வளரவேண்டுமானால் அக்கலையில் பழுத்த அனுபவமுள்ளவர்கள் இளைஞர்களுக்கு அதைப் போதித்து அவர்களை முன்னுக்கு கொண்டு வரவேண்டும். சங்கீத உலகில் இளம் வித்வான்களுக்கும், எழுத்தாளர் உலகில் இளம் எழுத்தாளர்களுக்கும் அதிக மதிப்பும்—இடமும் கொடுப்பதுபோல் நடிப்புத் துறையிலும் இளைஞர்களுக்கு இடமளித்தால் நடிப்புக் கலை நன்றாக முன்னேற இயலும். இதனால் குப்பையிலே கிடக்கும் குண்டுமணிபோல், சில சமயங்களில் சிறந்த நடிகர்களையும் பெறலாம். பல படங்களில் அலுத்துப போன பழைய முகங்களை (நடிகர்களை)க் கொண்டு மீண்டும் மீண்டும் படங்கள் எடுப்ப

* பரிசு பெற்ற கடிதம். எழுதியவர் விலாசம் தெரிவிக்கவும்.

தால்தான் தமிழ்ப் படங்கள் நசிந்து வருகின்றன.

மேல் நாடுகளில் நடிகர்களின் தன்மையைப் பார்ப்பதில்லை. அவர்களது நடிப்பைத்தான் முக்கியமாய் கருதுகிறார்கள். பாத்திரத்திற்கேற்ற உடலமைப்பை கவனிக்கிறார்கள். இவ்வழியை ஏறக்குறைய வட இந்திய பட ஸ்டுடியோக்கள் பின்பற்றுவதால் தான் ஹிந்திப் படங்களுக்கு அமோக வரவேற்பு இருக்கிறது. நம் தமிழ் பட முதலாளிகளும் நல்ல கதைகளையும், ஏற்ற நடிகர்களையும் பொறுக்கி எடுப்பார்களாயின் நல்ல வெற்றியைக் கண்டிப்பாய் காணலாம்.

—கே. பி. ஸ்ரீநிவாஸன்.
மைலாப்பூர்.

இயற்கைக் காட்சி

கவிஞன் இயற்கை எழிலுக்கு அடிமை ஆகிறான். இயற்கையில் காணும் அற்புதங்களை கவிதையில் வர்ணிக்கிறான். கவிஞர்களைப் போலவே சைத்ரிகனும் இயற்கைக் காட்சியினை அழகுபட ஓவியமாக வரைகிறான். இயற்கையிலேயே தோய்ந்து இயற்கையாகவே வளர்ந்த நம் மக்கள் இயற்கையை விரும்புவது இயற்கை.

இயற்கையைப் பற்றி இவ்வளவு சிறப்பாகஎடுத்துக்கூற நினைத்ததற்குக் காரணம், நேற்றைய தினம் நான் கண்ட ஆங்கிலப் படம்தான். அப்படத்தில் கதையின் சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் வரும் இயற்கைக் காட்சியானது என்னை அமரலோகத்திற்கு அழைத்துச் சென்றாற்போலிருந்தது. இயற்கை அன்னையின் சோபிதத்தை அள்ளி அள்ளிப் பருகினேன்,

தமிழ்ப் படங்களில் பெரும்பாலும் செயற்கைக்காட்சிகளையே தயாரிக்கின்றனர். தமிழ்க் கதைக்கு சம்பந்தமான ஒரு பெரிய மலை வேண்டும் என்றால் உடனே அட்டையால் செய்த மலையையோ, அல்லது திரையில்வரைந்த மலையையோ உண்டாக்கிவிடுகிறார்கள். ஆனால் அவ்விதம் ஆங்கிலப் படங்களில் இல்லை, அவர்கள் எவ்வளவு பணச்செலவு ஆன பொழுதிலும் மலையுள்ள இடங்களுக்குச் சென்று படங்களைப் பிடிக்கிறார்கள்.

ஆதலால் இனியாவது நம் படமுதலாளிகள் அட்டைமலைகளையும், படுதா வனங்களையும் விட்டு, உண்மை மலைகளையும் அசல் வனங்களையும் படம் பிடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

—கே. என். ஜே. ராஜன்,
சென்னை.

ரஸிகர்கள் சங்கம்

5

நம் நாட்டில் சிலருக்கு இப்போது நடிக நடிகையரைக் கண்டபடி தூற்றுவது ஒரு வழக்கமாகி விட்டது. இதை ஓர் பெருமையென அவர்கள் நினைக்கிறார்கள். நான் நடிகர்களுக்குப் பரிந்து பேசுவதாக நினைக்கக்கூடாது. அவர்களிடத்தும் குற்றங் குறைகள் இருப்பதை நான் மறுக்கவில்லை.

நாம் இக்குறைகளை மிகைப்படுத்துவதைவிட அவற்றை சீர்திருத்துவதில் அதிக சிரத்தை காண்பிக்கவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். உதாரணமாக ஒரு படத்தில் ஒரு நடிகரோ நடிகையோ ஆபாசமாக நடிப்பதாக இருந்தால் நாம் அப்படங்களுக்கு ஆதரவு காட்டக்கூடாது. பிறரையும் ஆதரவு காட்டுவதினின்று தடுக்க வேண்டும். அப்போது படத்திற்கு வசூல் குறைந்து விடும். இதனால் அப்பட முதலாளிக்கும் நடிகர்களுக்கும் நல்ல புத்தி வந்துவிடும். அடுத்தபடம் ஒழுங்காக எடுக்கப்படும். இக்காரியங்களைச் செய்வதற்கு ரஸிகர்கள் ஒன்றுகூடி ஓர் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு கட்டுப்பாடாக நடக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் "படம் ஆபாசமானது" என்று சொல்லிக் கொண்டு, அப்படங்களையே மீண்டும் மீண்டும் பார்ப்பது அர்த்தமற்ற செயலாகும்.

—எம். என். வெங்கட்டராமன்
மதுரை

துண்டுப் படங்கள்

6

சமீபத்தில் சில தமிழ் சமூகப் படங்களுக்கு கிடைத்திருக்கும் வெற்றி மிகப் பாராட்டத் தக்கது. ஆனால் சமூகம் என்னும் போர்வையில், சாதிவேற்றுமைக் குப்பையை ஹாஸ்யமெனப் புகுத்துவது வெறுக்கத் தக்கது.

சமூகம், கலை, தொழில், வேளாண்மை முதலியவற்றின் மேன்மைகளையும் நுட்பங்களையும், சிறுதுண்டுப்படங்கள் மூலம்திரையிடும்படிசெய்யவேண்டும். மூலக் கதையின் நீளத்தை கூடுமான வரை குறைத்து இம்மாதிரி துண்டுப் படங்களைச் சேர்த்தால், படமுதலாளிகள் நாட்டிற்கு நல்ல சேவை செய்தவர்களாவர். இம்மாதிரிப் படங்கள் யுத்தகாலத்தில் சர்க்காரின் கட்டாயத்தின் மூலம் திரையிடப்பட்டன. இனிமேல் படமுதலாளிகள் வற்புறுத்தலில்லாமல் தாங்களாகவே இது மாதிரியான துண்டுப் படங்களைத் தயாரித்துக்காட்டவேண்டும்.

—"சுடராஸ்," கோலார் தங்கவயல்.


கொஞ்சம் காத்து வாங்கலாம்ரு இந்தப்பிச்சைக்காரத்தொல்லெ பொறுக்கமுடியவில்லெ.
இந்தப்பஸ்ஸிலேயாவது போய்த்தொலேவோம்
அட எழவே! இங்கேயுமா ஒருத்தன். சே.சே! சினிமா-வுக்காவது போவோம்
காசிக்குப்போனாலும் கருமம் பின்னோடு!

பிரம்ம லோகம்

மதன மாலா

ஸ்ரீ ராமாநந்தா பிக்சர்ஸின் "மதனமாலா" முடிவடையும் தறுவாயிலிருக்கிறதாம். தர்பார் காட்சியில் சில படமாக்கப் பட்டனவாம். நரசிம்ம சக்கரவர்த்தியின் பிறந்த நாள் வைபவம் கொண்டாடப்படுகிறது. "யார் என்ன கேட்டாலும் கொடுப்பதாகச் சொல்கிறார் அரசர். மதனமாலாவின் நாட்டியம் நடைபெறுகிறது. சிற்றரசன் விக்கிரமன் மதனமாலாவையே கேட்கிறான். அரசனோ மறுக்கிறான். வாதம் நடக்கிறது. உடன் கத்திச் சண்டையும் ஆரம்பமாகிறது. இப்படியான சுவாரஸ்யக் கட்டங்களைக் கொண்டது இப்படம். நரசிம்ம சக்கரவர்த்தியாக எம். வி மணியும், சிற்றரசன் விக்கிரமனாக ஸ்ரீராம் என்ற புது நடிகரும், மதனமாலாவாக டி. ஆர். ரஜனியும் நடிக்கிறார்கள். ஸ்ரீ. கே. வேம்பு டைரெக்ட் செய்கிறார். தமிழ் நாடு டாக்கீஸார் விநியோக உரிமைபெற்றுள்ளார்கள்.

இது நிஜமா?

"இது நிஜமா?" என்ற படமும் வெளிவர நாளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. இரு சகோதரர்களைப் பற்றிய கதை இது. ஏறக்குறைய "கார்ஸிகன் சகோதரர்களைப்" போன்று இருக்குமாம். ஸ்ரீ. கிருஷ்ண கோபால் தான் இதன் டைரெக்டர். பால சந்தர் இரு வேஷங்களில் நடிக்கிறார். சரோஜினி என்ற புது முகத்தையும் காணலாம்.

கோகுலதாஸி

இரன் அண்டு கம்பெனியாரின் 'கோகுலதாஸி" கே. சுப்ரமண்யம் டைரெக்ஷனில்வளரத் தொடங்கி யிருக்கிறது. காமரூபன் அரண்மனைக் காட்சியின் அந்தப்புறத்தில் சில காட்சிகள் படமாக்கப் பட்டனவாம். காமுகனான காமரூபன் அநுராதாவை அடைய எண்ணுகிறான். ஆனால் அநுராதாவோ கிருஷ்ண பரமாத்மாவை காதலிக்கிறாள். கடைசியிலே கடவுளையே அடைகிறாள். ஹொன்னப்ப பாகவதர், என். கிருஷ்ணமூர்த்தி, எம். வி. ராஜம்மா, சௌதாமினி முதலியவர்கள் நடிக்கிறார்கள். ஹாஸ்ய பாகத்திற்கு டி. எஸ். துரைராஜ் அமர்த்தப்பட்டிருக்கிறார். காமரூபனின் வேலைக்காரனாக வருகிறாரிவர். நடன உலகில் புகழ் பெற்ற லலிதா, பத்மினி சகோதரிகளும் இப்படத்தில் நாட்டியமாடுகின்றனராம். "இளங்கோவன்" தான் இப் படத்திற்கு கதை வசனங்கள் எழுதியிருக்கிறார்.

பாமா விஜயம்

லாவண்யா பிக்சர்ஸார் பிடிக்கப் போகும் படம் "பாமா விஜய"மாம். டி. ஆர். மகாலிங்கம், நாகர் கோயில் மகாதேவன், "மஹாவிஷ்ணு" ஆர். எஸ். ராமசாமி அய்யங்கார், பி. எஸ். சரோஜா முதலியவர்கள் ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறார்கள். கதை, வசன டைரெக்ஷனுக்கு ஸ்ரீ. எ. டி. கிருஷ்ணசாமியை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள், சீக்கிரம் ஷூட்டிங் ஆரம்பமாகிவிடும்.

பக்த ஜனா

ராகிணி பிக்சர்ஸார் தயாரிக்கும் 'பக்த ஜனா" முடிவடையும் நிலையிலிருக்கிறது. புல்லையா டைரெக்ட் செய்கிறார். நாகையா, ஹொன்னப்ப பாகவதர் சாந்த குமாரி, குமுதினி, சாரங்கபாணி, பி. ஆர். பந்தலு, டி. என் மீனாக்ஷி, கே. ஆர். செல்லம், கே. ஸ்ரீனிவாஸ் முதலியவர்கள் நடிக்கிறார்கள். நாகையா தான் நாமதேவராக நடிக்கிறார். வேஷப் பொருத்தம் நன்கு பொருந்தி இருக்கிறதாம்.

விநோதினி

கணேஷ் ஸ்டுடியோவில் டைரெக்டர் ராம்ஜி பாய் ஆர்யாவின் கூட்டுத் தயாரிப்பில் "விநோதினி" என்ற சமூகப் படம் தயாராகிறது. என். கிருஷ்ணமூர்த்தி கதா நாயகனாக நடிக்கிறார். ஒரு கன்னடப் பெண் கதா நாயகியாக நடிக்கிறார். ஸ்ரீ. ஆர்யாவே இதன் டைரெக்டர்.

பில்ஹணன்

டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, எம். எஸ். திரௌபதி மற்றும் ஷண்முகானந்தா சபா நடிகர்கள் நடிக்கும் "பில்ஹணன்" பொங்கலன்று ரஸிகர்களுக்குக் காட்சியளிப்பானும் பளிங்கு மேடை ஒன்று யாமினிக்குப் பாடம் சொல்லிக்

கொடுப்பதற்காக நிறுவப் பட்டது. நூற்றுக் கணக்கான புலவர்கள் கூடியிருக்கிருர்கள். மன்னனுல் பாடம் ஆரம்பித்து வைக்கப் படுகிறது.

ஒரு நாள் பில்ஹணன் பூரணச் சந்திரனை வர்ணிக்கிருன். பில்ஹணன் குருடன் என யாமினி நம்பியிருந்தாள். அது இல்லை என்று தெரிந்ததும் அவர்களுக்கு நடுவே போடப் பட்டிருந்த திரை கிழிக்கப் படுகிறது. கண்கள் சந்திக்கின்றன; காதல் வளர்கிறது. நாளடைவில் மன்னன் இதையறிந்து பில்ஹணனுக்கு மரண தண்டனை விதிக்கிருன். இப்படியான சில உள்ளத்தை உருக்கும் காட்சிகளை சமீபத்தில் படம் பிடித்தார்களாம். இன்னும் இரண்டு "செட்"டுகள் தான் பாக்கியாம். இதை கே.வி.சீனிவாசன் டைரெக்ட் செய்கிருர்.

ரத்ன குமார்

நியூடோனில் முருகன் டாக்கீஸாரின் 'ரத்ன குமார்' தயாராகிக் கொண்டிருக்கிருர். சின்னப்பா, பானுமதி, பாலசுப்ரமண்யம் சம்பந்தப்பட்ட காட்சிகள் சில படமாக்கப்பட்டன. கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்கிருர்கள்.

கிருஷ்ண விஜயம்

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் ஜூபிடரின் 'கிருஷ்ண விஜயம்' சுந்தர் ராவ் நட்கர்ணியின் டைரெக்ஷனில் வளரப் போகிறது. வஸந்த கோகிலத்தின் பாடல்கள் பதிவாகி வருகின்றனவாம். நடிகர் தேர்தல் நடைபெற்று வருகிறதாம்.

மங்கையர்க்கரசி

பாக்யா பிக்சர்ஸின் 'மங்கையர்க்கரசி' பல சுவாரஸ்ய மாறுதல்களுடன் தற்போது படமாக வளரத் தொடங்கியிருக்கிருள். இதிலே, சின்னப்பா, கண்ணும்பா பிரதம பாகம் வகிக்கின்றனர். நியூடோனில் இதற்கான வேலைகள் நடந்து வருகின்றன.

திருமழிசை ஆழ்வார்

கண்ணு பிலிம்ஸாரின் "திருமழிசை ஆழ்வார்" இன்னும் சில துண்டுக் காட்சிகளைத் தான் அடைய வேண்டுமாம். தேசிகர், தேவசேனு, பாலசுப்ரமண்யம், ரங்காச்சாரி, சுப்பையா, பிரேமாவதி, குமாரி சரஸ்வதி, சாமிநாதன், துரைராஜ் முதலியவர்கள் இதில் தோன்றுகிருர்கள். திரைக்கதை எழுதியபண்டிதபி.எஸ் செட்டியாரே கூட்டு டைரெக்டராக இருக்கிருர் என்ருல் படத்தின் தரத்தைப் பற்றிக் கூற வேண்டிய தில்லை பத்துலக்ஷரூபாய் தயாரிப்பாம் இது.

வேலைக்காரி

ஜூபிடரின் 'வேலைக்காரி'யைக் கவனிக்க இனிமேல் சுறுசுறுப்பாக வேலை தொடங்கு

"தன அமராவதி"யில் புளிமூட்டை செட்டியார் வேஷத்தை பிரமாதமாய் நடித்திருக்கிருர். கூட இருப்பவர் அங்கமுத்து.

மார்கள் எனத் தெரிகிறது. திருச்சூர் பிரேமாவதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர். வி. என். ஜானகி கூட ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருராம். எ எஸ். எ. சாமிதான் டைரெக்ட் செய்யப் போகிருர். ஸி. என். அண்ணுத்துரை எழுதிய நாடகம் இது என்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம்.

மாரியம்மன்

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் தயாராகும் படங்களில் இது ஒன்று. செல்வம் பிக்சர்ஸ் தயாரிப்பு. கே. கே. பெருமாள், சுப்பையா, காளி ரத்னம், சகுந்தலா, சந்தான லக்ஷ்மி, பத்மா முதலியவர்கள் நடிக்கிருர்கள். எல். எஸ். ராமச்சந்திரன் இதை டைரெக்ட் செய்கிருர்.

சண்பகவல்லி

சேலம் கந்தர் பிலிம்ஸின் 'சண்பகவல்லி' திரைக்குத் தயாராம். டி. எஸ். பாலையா, கே. கே. பெருமாள், பி. ஆர். ராஜகோபாலையர், ஏழுமலை, கும்பகோணம் ஏ. என். பெரியநாயகி, எம். எஸ். விஜயாள், பி. ராஜரத்னம், வி. ராஜலக்ஷ்மி முதலியவர்கள் நடித்திருக்கிருர்கள். இது பிரபல தெலுங்கு ஹாஸ்ய நடிகர் லங்கா சத்யத்தால் டைரெக்ட் செய்யப்பட்ட படம்.

அபூர்வசிந்தாமணி

மாடர்ன் தியேட்டர்ஸின் 'அபூர்வ சிந்தாமணி' வெகு துரிதமாகத் தயாரர்கிறது. பி. எஸ். கோவிந்தன், பாலசுப்ரமண்யம், சாமிநாதன், கணேச பாகவதர் காளிரத்னம், மாதுரி தேவி, வி. என். ஜானகி, வரலக்ஷ்மி, ராஜகாந்தம் முதலியவர்கள் நடிக்கிருர்கள். இப்படத்தை டி. ஆர். சுந்தரம் டைரெக்ட் செய்கிருர்.

கங்கணம்

ஜி. பி. நாராயணன் கம்பெனியின் "கங்கணம்" பூர்த்தியடைந்துவிட்டது. கே. ஆர். ராமசாமி, மேனகா, நரேந்திரநாத், பசுபலேடி லீலா முதலியவர்கள் நடித்த படமிது. எஸ். கே. வாசகம் டைரெக்ட் செய்தது.

மின்மினி

ஸ்ரீ பாரதி பிக்சர்ஸின் "மின்மினி" படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. கதை எழுதியவர் 'சிரஞ்சீவி'. டைரக்ட் செய்பவர்கள், டி. வி. ராமநாத், கிருஷ்ணஸ்வாமி, ஆகியவர்கள். விஜயகுமார், கிருஷ்ணஸ்வாமி, கொத்தமங்கலம் வாசு, சேதுராமன், மேனகா முதலியவர்கள் நடிக்கிருர்கள்.

ஸ்ரீ ஆண்டாள்

சேலம் மூர்த்தி பிக்சர்ஸின் "ஸ்ரீ ஆண்டாள்" துரிதமாகத் தயாராகிறது. யு. ஆர். ஜீவரத்தினம், பி. எஸ். கோவிந்தன், காளி ரத்னம், குமாரி ரமணி, சௌதாமினி முதலியவர்கள் நடிக்கிருர்கள். வேல்சாமி கவி டைரெக்ட் செய்கிருர். யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி இதற்கான பாடல்களை எழுதியிருக்கிருர்.

விசித்ர வனிதா

கே. சுப்ரமண்யம் டைரெக்ஷனில் மதுரை சித்

எமது

வாடிக்கைக்காரர்களுக்கும் அன்பர்களுக்கும்

தீபாவளி வாழ்த்துகள்

ராமநாதன் ஸ்டோர்ஸ்

89, கீழமாரட்டு வீதி :: மதுரை.

பட்டுப் புடவைகள், தாவணிகள், பட்டாடைகள்
வேஷ்டிகள், துப்பட்டாக்கள், நவீன பார்டர்களில்
நூல் சேலைகள், எல்லாவிதமான பில் ஜவுளிகள்,
நம்பிக்கையாய், கன்ட்ரோல் விலைக்கு கிடைக்குமிடம்.

ரகளை மூவிடோனில் தயாரான "விசித்ர வனிதா"வும் வெளிவரக் காத்திருக்கிறது. கிருஷ்ணசாமி, சரோஜா, புளிமூட்டை, மஹாதேவன் முதலியவர்கள் திறம்பட நடித்திருக்கிறார்களாம்.

பேசாமடந்தை

சுந்தர பாகவதரின் டைரெக்‌ஷனில் பக்ஷிராஜா ஸ்டுடியோவில் வளரும் படமிது. விஜயகுமார், லக்ஷ்மி முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

சந்திரலேகா

ஜெமினி தயாரிப்பான இதை ஹிந்திப் பாஷையிலும் வெளிக்கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகின்றன. அடிக்கடி படப் பிடிப்பு நடைபெறுகிறது. ராதா, ரஞ்சன், ராஜகுமாரி, வேலாயுதம், வேப்பத்தூர் கிட்டு முதலியவர்கள் நடிக்கிறார்கள். எஸ். எஸ்.வாஸன் டைரெக்ட் செய்கிறார்.

ஞானசௌந்தரி

ஜெமினியும் ஒரு "ஞானசௌந்தரி"யைத் தயாரிக்கிறது. சுசீலா தான் கதா நாயகி. கன்னாம்பா, டி. ஈ. கிருஷ்ணமாச்சாரி முதலியவர்களும் நடிக்கிறார்கள். "முருகதாஸா" தான் இதன் டைரெக்டர்.

கோராகும்பர்

கே. எஸ். கோபால கிருஷ்ணனின் டைரெக்‌ஷனில் தயாராகும் இதிலே நாகய்யா, நாகர் கோயில் மகாதேவன் முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

பில்ஹணா

முபாரக் பிக்சர்ஸின் "பில்ஹணா" முடிவடை

புதிய நடிகர் கே. ஆர். வெங்கட்டராமன் "ராமதாஸி"ல் செட்டியாராகத் தோன்றி ஜமாய்த்திருக்கிறாராம்.

யும் தருவாயிலிருக்கிறதாம். கே. ஆர். ராமசாமி, சகுந்தலா, பாலசரஸ்வதி, ஜெயஸ்ரீ, ஷேக்கப்பா, புளிமூட்டை, அங்கமுத்து முதலியவர்கள் நடிக்கிறார்கள். பி. என். ராவ் டைரெக்ட் செய்கிறார்.

குடும்ப வாழ்க்கை

மௌண்ட் ரோடில் முகாமிட்டிருக்கும் ராமபால கான சபையின் பிரசித்தி பெற்ற இந் நாடகம் படமாகப் பிடிக்கப் பட்டு வருகிறது. எ. டி. கே. தான் இதன் டைரெக்டர்.

சம்சார நௌகா

ஸ்டார் கம்பைன்ஸ் பிரகதி கூட்டுத் தயாரிப்பான 'சம்சார நௌகா' படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. பந்துலு, ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி (விகடம்), பிரேமாவதி, சூர்யகுமாரி முதலியோர் நடிக்கிறார்கள். ஸிம்ஹா டைரெக்ட் செய்கிறார்.

கிருஷ்ண துலாபாரம், & நவீன வள்ளி

சந்தானம் பிக்சர்ஸின் "கிருஷ்ண துலாபாரம்" சமீபத்தில் சில ஊர்களில் வெளிவந்திருக்கிறதாம். நாகர் கோவில் மஹாதேவன், ஏ. கே. ஸ்ரீனிவாஸன், ராஜம் முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள். இப்படத்துடன் கூட "நவீன வள்ளி" என்ற தமாஷ் படமும் காட்டப்படுகிறதாம்.

வத்ஸலா கல்யாணம்

பிரகதியில் "வத்ஸலா கல்யாண"த்திற்காக இரண்டு 'ஸெட்'டுகளில் வேலை நடந்தது. டி. பாலசுப்ரமண்யம் பலராமனாகவும், ராமசாமி ஐயங்கார் கிருஷ்ணனாகவும், கே. கே. பெருமாள் துரியோதனனாகவும், சாமிநாதன் சகுனியாகவும், சம்பங்கி கர்ணனாகவும், நடராஜன் துர்ச்சாஸனனாகவும், ஜி. ஆர். வரதாச்சாரி துஷ்காமனாகவும் நடித்தார்கள். ஏ. ஆர். பி. ஐயர் டைரெக்ட் செய்கிறார்.

புலந்திரன்

பானுமதியின் "ரத்னமாலா" முடிந்தாற்போலத்தான். 'புலந்திரனி'ன் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மஹாலிங்கம் தான் கதாநாயகன். ராமகிருஷ்ணனும், வடிவேல் நாயக்கரும் டைரெக்ட் செய்கிறார்கள்.

ஒரே வழி

எனெஸ்கே பில்ம்ஸ் அடுத்தபடித் தயாரிக்கப் போகும் படத்தின் பெயர் மாறிக்கொண்டேயிருக்கிறது. "மணமகள்" என்றார்கள், இப்பொழுது "ஒரே வழி" என்கிறார்கள். கித்தனூர் காலக்ஷேபக்காட்சி இதில்

சேருவது மட்டும் நிச்சயமாம்.

லாவணி

"தெய்வ நீதி"யைத் தயாரித்த விண்ட்ஸர் புரொடக்ஷன்ஸார் அடுத்தபடியாக "லாவணி" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிப்பார்களாம். என். ஆர். சகுந்தலாதான் கதா நாயகி. டி. எஸ். துரைராஜ் ஹாஸ்ய பாகத்திற்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்.

"ஜீவகன்"

கந்தன் கம்பெனியாரின் 'ஜீவகன்' படப்பிடிப்பு பிரகதியில் அடிக்கடி நடைபெறுகிறது. ஹொன்னப்ப பாகவதர், எஸ். வி. சுப்பையா, விரப்பா, ஆழ்வார் குப்புசாமி, ஜீவரத்னம் சந்தானலக்ஷ்மி, எ. ஆர். சகுந்தலா, கே. ஆர். செல்லம் புளி மூட்டை முதலியவர்கள் நடிக்கிறார்கள். டி. ஆர். ரகுநாத் டைரெக்ட் செய்யும் படம்.

"ஞானசௌந்தரி"

சிடேடல் ஞானசௌந்தரி நியூடோனில் ஆர்ட் டைரெக்டர் நாகூரின் டைரெக்ஷனில் வளர்ந்து வருகிறாள். மஹாலிங்கம், ராஜம்மா, இருவரும் பிரதம பாகத்தில் வருகின்றனர்.

"அம்பிகாதேவி"

சந்திரலேகா பிலிம்ஸின் 'அம்பிகாதேவி'யின் படப் பிடிப்பு நியூடோனில் நடைபெறுகிறது. விஜயகுமார், சாமிநாதன், ராஜம்மா, பத்மா முதலியவர்கள் நடிக்கிறார்கள். திரைக் கதை வசனமெழுதிய பி ஆர், நாராயணனே இதன் டைரெக்டர்.

"உதங்கர்"

ஸ்ரீ. பட்டு ஐயர் டைரெக்ஷனில் உருப் பெற்ற "மஹாத்மா உதங்கர்" வெளிவந்துவிட்டது.

கொத்தமங்கலம் சீனு, வித்வான் ஸ்ரீநிவாஸன், விஜயகுமாரி, அஞ்சலி தேவி, ஹம்ஸதமயந்தி, பட்டு ஐயர், கொளத்து மணி முதலியவர்கள் இதில் நடிக்கிறார்கள்.

"நாதவிஜயம்"

தற்போதைக்கு கோவை சென்றிருக்கிறதாம்—இப் படத்தின் ஸ்டில்கள்'. ஆகையால் இப்படம் சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரிக்கப்படலாம். மாரியப்ப சுவாமிகள் நடிக்கும் 'திருவிளையாடற்' புராணப் படமிது.

யோகிகள் நித்திரை

பிரகதியின் "ராஜயோகி"யும், ஸியோ பிலிம்ஸின் 'சிவயோகி'யும் நித்திரையிலாழ்ந்திருக்கிறார்களாம்.

"தேவதாஸி"யில் இப்படி ஒரு காட்சி. கிருஷ்ணன், மதுரம், பாண்டியன்.

நாடகக் கம்பெனிகளின் நிலைமை

சென்னை சர்க்கார் சட்டமாக்க முயன்றுவரும் $33\frac{1}{3}$ சதவிகித தமாஷா வரி மசோதாவை எதிர்த்து டி. கே. எஸ். சகோதரர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். தமிழ்நாட்டு நாடகக் கம்பெனிகளின் தற்கால நிலைமையை விளக்கும் பகுதிகளை அவ்வறிக்கையிலிருந்து எடுத்து கீழே வெளியிட்டிருக்கிறோம் :—

"பேசும் படங்கள் வந்த காலமுதற் கொண்டே நாடக சபைகள் ஒன்றன் பின்னொன்ருக மறைந்தன. பணம் படைத்த முதலாளிகளால் இத் தொழிலை நிரந்தரமாக நடத்த இயலாத நிலையேற்பட்டது. இன்றைய நாடக சபைகள் பெரும்பாலும் தொழிலாளிகளே நிர்வாகிகளாயிருந்து நடத்திவருவதால்தான் உயிர் வாழுகின்றன.

"தமிழ்நாட்டில் (திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹால் ஒன்றைத்தவிர)நாடகத்திற்கென்று தனியாக நல்ல கொட்டகை எதுவுமில்லை. சினிமா நடந்து வரும் கொட்டகைகளை வாடகைக்கு கேட்கும்போது, ரூ. 2000த்திலிருந்து 5000 வரை மாத வாடகையாகக் கொடுக்க நேருகின்றது.

"ஒரு சிறிய துண்டுப் பிரசுரத்தை வினியோகித்துவிட்டால் கூட்டம் கூடும் காலமல்ல இது. ஆயிரக்கணக்காகச் செலவிட்டுப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யவேண்டியிருக்கிறது. நாடகத் தொழிலாளர்கள் அன்ருடம் கூலி வாங்குபவர்களல்ல நிரந்தரச் சம்பளம் பெறுபவர்கள். ஏராளமான சாமான்களுடனும், நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுடனும், ஊர் மாறும்போது ஏராளமான பிரயாணச்செலவு ஏற்படுகிறது. சினிமாப் போட்டியைச் சமாளிப்பதற்காக அவ்வப்போது புதியபுதிய காட்சி அமைப்புகள் தயாரிக்கவும், கெட்டுப்போகும் சாமான்களைப் புதுப்பிக்கவும், ஏராளமான பணம் செலவிடப்படுகின்றது. நாடகத் துறைக்கு அவசியமான பொருள்கள் பன்மடங்கு விலையேறி விட்டன. யுத்தகாலம் முதல் எல்லா வகையிலும் செலவினங்கள் அதிகரித்துவிட்டன வருவாயோ குறைந்து கொண்டே வருகின்றது.

"ஏற்கனவே இருந்துவரும் 100-க்கு $18\frac{3}{4}$ வரி விகிதமே அதிகமென்றும் நாடகத்திற்குமட்டுமாவது விதிவிலக்களிக்கவேண்டுமென்றும் சென்னை, தஞ்சை, ஆகியவற்றில் நடந்த நாடக மகாநாடுகளில் நாடகப் பேராசிரியர் திரு. ப. சம்பந்த முதலியாரவர்கள், எடுத்துக்காட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றினர்கள், யுத்தகாலப் பணப் புழக்கத்தில் நாடகங்களுக்கு அதிக வருவாயிருந்ததால் இதனைச் சமாளிக்க முடிந்தது.

"இன்று நாடகங்களுக்கு வருவாய் எவ்வாறிருக்கிறதென்பது நாங்கள் அன்ருடம் சர்க்காருக்கு சமர்ப்பிக்கும் ஸ்டேட்மெண்டைப் பார்த்தாலே தெரியும்.

"நாடக சபைகள் மூன்றிலொரு பங்கை வரியாகக் கொடுத்துவிட்டு

காதலியை காதலன் தாஜா செய்யும் கட்டம், "ரத்ன குமார்" படத்தில் சின்னப்பா, பானுமதி.

இன்றைய நிர்வாகச் செலவை சரிக் கட்டுவது சாத்யமல்ல வென்பதைப் பொதுஜன சர்க்கார் கவனிக்க வேண்டும்.

"தமாஷா வரி வருமுன் மாதம் 13 நாடகங்கள் நடைபெற்றன. $12\frac{1}{2}$ சதவிகிதம் வரி விதிக்கப்பட்டபின் தினசரி நாடகங்கள் நடைபெறத் தொடங் கின. 150 தொழிலாளிகளையுடைய ஒரு நாடகசபை சராசரி ரூ. 300 வருமானத்தில் செலவை சரிக்கட்ட முடிந்தது. $18\frac{3}{4}$ சதவிகிதம் வரி வந்தபின் சராசரி வருமானம் ரூ. 600 இருந்தால் தான் சமாளிக்க முடிந்தது. யுத்த காலத்தில் இந்த வருவாயிருந்ததால், நாடகசபைகள் சமாளித்துக்கொண்டன; புதிய சபைகளும் தோன்றலாயின.

"இன்று கால நிலையை அனுசரித்து தொழிலாளர்களின் சம்பளங்களை அதிகப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வார விடுமுறை நீக்கி மாதம் 26 நாடகங்கள்தான் நடந்து வருகின்றன. சில நாடக சபைகள் ஒரு நாளைக்கு இரண்டு ஆட்டங்கள் நடத்தவேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டுவிட்டது.

"இந் நிலையில் $33\frac{1}{3}$ வரிவிகிதம் அமுலுக்கு வருமானல் 150 பெயரைக் கொண்ட ஒரு நாடக சபைக்கு சராசரி ரூ. 900 வருவாயிருந்தால்தான் உயிர் வாழ முடியும். இது சாத்யமென்று தோன்றவில்லை.

"நல்ல வருவாயை உடையவர்களாகக் கருதப்படும் எங்களைப் போன்றவர்களின் நிலைமையே நெருக்கடி யென்ருல், புதிதாய்த் தோன்றி வளர்ந்து வரும் நாடக சபைகள் இவ் வரிவிகிதத்தைச் சிறிதும் தாங்க இயலாது.

"தமாஷா வரி உயர்வுக் கேற்றவாறு கட்டணத்தை இன்னும் அதிகப் படுத்தலாமே" என்று நீங்கள் நினைக்கலாம். நாடகம் பார்ப்பவர்கள் பெரும்பாலும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஏற்கனவே சினிமாக் கட்டணத்தைவிட நாடகக் கட்டணம் உயர்ந்திருக்கிறது. இன்றையப் பொருளாதார நிலையில் மேலும் கட்டணம் உயர்த்தப்பட்டால் பொது மக்களால் தாங்க முடியுமா?

"நாடகக்கலையைப் பொறுத்தவரையில், இந்தப் புதிய வரிவிகிதத்தால் கலைக் கழகங்கள் மடியுமேயொழிய, தற்போது சர்க்காருக்கு அவைகளால் கிடைத்துவரும் வரி கூடக் கிடைக்கும் நிலையில் சபைகள் உயிர் வாழுமா என்பது சந்தேகம் தான்."

மதுரையில்

உங்கள் மனதிற்கு திருப்தி அளிக்கும்

பட்டு, ஜரிகை, & நூல் ஜவுளிகள், கவர்ச்சிகரமான கலர்களில், நீண்ட நாள் உழைப்புக்கு ஏற்றபடி அநேக புது ரகங்கள் எங்களிடம் கிடைக்கும்.

கண்டி கலைமகள் ஸ்டோர்ஸ்

31, மேல கோபுரத் தெரு, மதுரை.

புகைக் குழாய் சகிதம் தோன்றும் இந்த துரை யாரென்று தெரிகிறதா? சாக்ஷாத் பி. எஸ். ஸ்ரீநிவாஸராவ்தான். "ஜீவஜோதி"யில் இப்படிக் காட்சி அளிக்கிறார்.

தமிழ் ஸினேரியோ

[தொடர்ச்சி]

ஆங்கிலம் — தமிழ்

ஸ்லோ மோஷன்
அல்லது டெம்பரல்
க்ளோஸ் அப் —காலத் தயக்கம்
பாஸ்ட் மோஷன் —காலத்துரிதம்

[இவை காலத்தைக் குறிப்பவை. இவைகளால் ஒரு செயலின் வேகத்தைக் குறைத்தோ அதிகமாக்கியோ காட்ட முடியும்]

ஆங்கிலம் — தமிழ்

ஸ்டில் இண்டர்
பொலேஷன் —நிலை நிறுத்தம்

[இது சலனத்திடையே திடீரென்று சலனமற்ற ஒன்றை நிலை நிறுத்திக் காட்டுவது. மறைப்புக் காட்சி மூலம் ஒன்றுக் கொன்று நிறுத்த சலனமாக்கிக் காட்ட முடியும்]

இவை சாதரணமாய் ஒரு ஸினேரியோக் காரனுக்குத் தெரிந்தால் போதும். இவை தவிர பேக்-ப்ரொஜக்ஷன் பேக் ப்ரின்டிங், கெமிகல் எபெக்ட்ஸ், மல்டிபிள் ப்ரின்டிங், மாஸ்க் பிரின்டிங் முதலான பின்னணிக் காட்சி, பின்னணி அச்சு, ரஸாயன அமைப்பு, அடுக்கு அச்சு என்னும் பலவகையான (பட மெடுத்தபின் செய்யும்) செயல் முறைகளும், டேபிள் டாப், மினியேச்சர், டிசைன்மாஸ்க், ஷப்ருன் ப்ராஸஸ், டன்னிங் ப்ராஸஸ் முதலான சில நுணுக்கங்களும் தெரிந்திருப்பது நல்லதுதான்.

தவிர சினிமாவில் கதை என்பது பல படங்களின் கலவை; ஆகவே எழுத்து மூலமான உணர்ச்சிகளெல்லாம் கூடிய வரையில் படமூலமாகவும் காட்சி மூலமாகவும் வெளிப்பட வேண்டும். வசனத்தால் விளக்கும் ஒரு உணர்ச்சியைக் கூடக் காட்சியால் விளக்குவதுமேல்.

இதுவரையில் நாம் படக்காட்சியின் பரிபாஷைகளைப் பற்றியே பேசினோம்; இனி ஒலி விவகாரங்களையும் சிறிது ஆராய்வோம்.

பேச்சும்ஒலிதான், பாட்டும் ஒலிதான். இயற்கையில் இன்னும் எத்தனையோ ஒலிகள் உள்ளன. இவற்றைச் சந்தர்ப்பத்திற் கேற்பச் செம்மை யுற அமைப்பதும், ஸினேரியோக்காரனின் சிறப்பான செயலே. ஒலிக்கும் சில வரம்புகளுண்டு; கட்டுப் பாடுகள் உண்டு; டெக்னிக் அல்லது நெறி உண்டு. இவற்றை அறிந்து ஒலிகளை அழகுபட அமைக்க வேண்டும். முதலில் வசனத்தை எடுத்துக் கொள்வோம். படத்தில் நீண்ட ஸாலிலகீஸ், மொனலோக்ஸ், டெஸர்டேஷன்ஸ் என்னும் தனி ப்ரசங்கங்களும், ஆராய்ச்சி விகாசங்களும் இருக்கலாகாது. இது பொதுவிதி. எல்லாவிதிகளையும் போல் இதற்கும் விலக்குண்டு. "மிஸ்டர் டீட்ஸ் கோஸ்டு டவுன்" என்னும் ப்ரேங் கேப்ரா படத்தில் கதாநாயகன் ஒரேயடியாக ஒன்பது நிமிஷம் (810 அடிபடச் சுருளை) ஒரே சம்பாஷணையைப் பேசுகிருன். எனினும் நமக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. ஏனெனில் கேப்ரா அவர்கள் அச்சம்பாஷணையின் நீளத்தை பலப்பல காட்சிக் கோப்பின் மூலம் மறைத்து விடுகிருர். அடியேன் எடுத்த "அதிர்ஷ்டம்" என்னும் படத்தின் கோர்ட் சீனில் வரும் நீண்ட சம்பாஷணைகளைப் பாராட்டி எனக்கு எத்தனையோ கடிதங்கள் வந்துள்ளன. அது சுமார் மூவாயிரம் அடிக்கு ஓடுகிறது. ஆனல் அம் மூவாயிரம் அடியும் சுமார் முன்னூறு காட்சிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் நமக்கு அசதி தட்டுவதில்லை.

சினிமாவுக்கு வசனங்கள் வெட்டொன்று துண்டு இரண்டாக இருக்கவேண்டும். ஆனல், துரதிருஷ்ட வசமாக, நாடகப் பாணியே சினிமாவிலும் வந்துவிட்டது ப்ராஸங்களும், எதுகை மோனைகளும் அதிகமாய்ப் போய்விடவே, இயற்கையான சரளமான, சாதாரணமான, பேச்சுத் தமிழ் நம் காதுகளுக்குப் புளிக்கிறது. "அத்தி மரத்திலே தொத்திய கனி போல, மெத்தப் பாரமான இத்தனை அண்டங்களில், சொத்தை யென்று தோன்றும் சுண்டைக்காயுலகத்தில், அணுவிலும் சிறிய அணுவான, அற்பத்திலும் அற்பமான சொற்பத்திலும் சொற்பமான ஆத்மாக்கள்" என்பது போன்ற தத்துப் பித்துக்கள் தாம் நம் வசனங்களில் தாண்டவமாடுகின்றன. "அரசன் இப்படிச் செய்தது சரியல்ல" என்னும் ஒரு சாதாரண வாக்கியத்தையே "என்ன இருந்தாலும் பின்னப்படும் இந்தச் சின்னக் காரியத்தை மன்னன் செய்வதென்ருல்——?" என்றுதான் நமது கதாசிரியர்களுக்கு எழுதத் தோன்றுகிறது. இவ்வாருன வாக்யங்கள் தவறு என்பது என் கட்சியல்ல. இவைகளுக்கும் இடமுண்டு; ஆனல் எதற்கெடுத்தாலும் இப்படிப் பேசுவது சரியல்லஎன்பதேஎன்னுடையவாதம். துஷ்யந்தனைக் கண்ட தோழி ப்ரியம்வதை "தாங்கள் யார்?" என்று பொதுவாகக் கேட்கவில்லை. "எந்த அரசகுலம்தங்கள் பிரிவாற்றமையால் வருத்த முறுகிறது" என்று கம்பீர

மாக, கனிவாக, நுட்பமாகக் கேட்கிருள். இதைப் போன்ற காவிய கட்டத்திற்கு இதுதான் சரி. ஆனல் ஒரு தற்கால தாசிலோலரைப் பார்த்து, "எந்தப் பெண்மணியின் பேருள்ளம் தங்கள் பிரிவாற்றமையால் பேதலிக்கின்றது? எந்த மின்னரசியின் மென்மேனி தங்கள் பொன்மேனியை அணையாமல் புழுக்க முறுகிறது? எந்த ஆசை மிகுந்த வேசை யுள்ளம் தங்கள் காசைக் காணுமல் கலக்கமுறுகிறது?" —என்று கேட்பது சரியாகுமா?

வசனம் ஒருபுறமிருக்க, தமிழ் டாக்கிப் பாடல்கள், அப்பப்பா, அவற்றைப் பற்றிச் சொல்லவுமா வேண்டும்? அவை தமிழுமல்ல, தமிழ்ச் சங்கீதமுமல்ல, கருத்துத்தான் ஒரு பாட்டிற்குக் கண்; அதுதான் நம் சினிமாப் பாடகர்களுக்குப் புண். எங்கும், எப்போதும் எதற்கும் ஹிந்தி மெட்டுகள்; பார்ஸி ஜில் வெட்டுகள்; அர்த்தமற்ற சொல்லடுக்குகள்; வீணன வெரிகோப்புகள். இயற்கை ஒலிகள் இவைக்கும் நம் படங்களுக்கும் அநேகமாக சம்பந்தமே கிடையாது.

இனி ஒலிக்கென்றே தனியாயுள்ள சில சிறப்பியல்புகளையும் ஆராய்வோம்.

ஆங்கிலம்	தமிழ்
டையலாக்	—சம்பாஷணை
டையலாக் [illegible]வுட்பில்டு	—வெளிவசனம்
டையலாக் இன்ஸர்ட்	—வசனக்காட்சி
ஸவுண்டுபேட்டர்ன்	—ஒலிச்சித்திரம்
பாக்ரவுண்டு ம்யூசிக்	—பின்னணி சங்கீதம்
காமென்டெடிவ் ம்யூசிக்	—கருத்தொலிக்கீதம்
ஸிம்பாலிக் ம்யூசிக்	—குறிப்பொலிக் கீதம்
மல்டிபிள் ரிகார்டிங்	—பன்மை ஒலிப் பதிவு கீதம்
ரீ ரிகார்டிங்	—அடுக்கொலிப் பதிவு
ஸவுண்டு பேடின்	—ஒலி வளர் பிறை
ஸவுண்டு பேடவுட்	—ஒலித் தேய் பிறை
ஸவுண்ட் டிஸால்வ்	—ஒலித்தேய் வளர் பிறை
வால்யூம் மேனிபுலேஷன்	—ஸ்வரமாற்று
ஸைலண்ட் இன்டர்போலேஷன்	—அமைதி நிலைப்பு
நேசுரல் ஸவுண்ட்	—இயற்கை ஒலி
அன்னேசுரல் சவுண்ட்	—செயற்கை ஒலி

இவைகள் ஒரு ஸினேரியாக்காரனுக்கு தெரிந்தால் போதும்.

(தொடரும்)

நடன குமாரி கமலா

(தொடர்ச்சி)

களும் மிகப் பிரசித்தி பெற்றுள்ளன. பொது ஜனங்கள் வாயிலிருந்து மூலை முடுக்குகளிலெல்லாம் இப் பாட்டுகளைக் கேட்கிருேம். கமலா தற்போது ஸ்ரீ. எஸ். பாலசுப்ரமண்யம் என்ற பாடகரிடம் சாஸ்திரோக்தமான சங்கீதத்தைப் பயின்று வருகிருள்.

இவ்வளவு புகழைப் பெற்றுள்ள அவள் தன் புகழை நிரந்தரமாய் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானல், தன் சங்கீதத் திறமையை

"ஜகதலப்பிரதாபலில் கமலாவின்; மற்ருெரு தோற்றம்

விருத்தி செய்து கொள்ள வேண்டும். அதோடு இடைவிடாது பாத்திரங்களை ஏற்று நடிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த முயற்சிகளில் அவள் முன்பே ஈடுபட்டிருப்பது சந்தோஷிக்கத் தக்க விஷயமாகும்.

கமலா மஹாத்மா உதங்கர், வேதாள உலகம் ஆகிய இரு படங்களில் இப்பொழுது நடித்து வருகிருள். இவளுக்கு மிகப் புகழ் அளித்த ராம் ராஜ்யா ஹிந்திப்படம் தமிழ் சம்பாஷணைகளுடன் வெளி வருக்கிறது. இப்படங்களும் கமலாவின் புகழைப் பெருகச் செய்யும் என்று தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

குண்டூசி டைரி

அக்டோபர்

தேதி

1 டைரெக்டர் கே. எம். முல்தானிக்கு பதி பிக்சர்ஸார் சென்னை உட்லாண்ட்ஸ் ஹோட்டலில் பிரிவுபசார விருந்தளித்தனர்.

4 "பக்த துளசிதாஸ்" (தெலுங்கு) சென்னை ஸினிமா சென்ட்ரலில் முதன் முதலாக திரையிடப்பட்டது.

5 எட்டயபுரம் பாரதி நிதிக்காக சென்னை ஸிவில் சப்ளைப் பொழுதுபோக்குச் சங்கத்தார் "மைதிலி" நாடகத்தை சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடித்துக்காட்டினர்.

6 "தன அமராவதி"யின் பிரத்தியேகக் காட்சி நடைபெற்றது.

10 வங்க கவர்னர் ராஜாஜிக்கு நடந்த வரவேற்புக் கூட்டத்தில் என். எஸ். கிருஷ்ணன், புளி மூட்டை ராமஸ்வாமி முதலியோரின் "இந்தனர்" காலக்ஷேபம் நடந்தது.

13 "ஸினிமா சாதனம்" என்பது பற்றி டைரெக்டர் டி. ஆர் சுந்தரம் திருச்சி ரேடியோவில் பேசினர்.

4 பிரபல ஸினிமா நடிகர் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி மஹாராஜபுரத்தில் காலமானர்.
மேனுடு சென்று திரும்பிய பால்வின்ஸெண்டிற்கு "உட்லண்ஸி"ல் ஒரு விருந்து நடந்தது.

17 சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் சக்தி நாடக சபையாரின் "விதி" நாடகம் ஆரம்பம்.
அமிஞ்சிக் கரை லக்ஷ்மி டாக்கிஸில் "பைத்தியக்காரன்" ஆரம்பம்.

1 சென்னை பிராட்வேயிலும் "பைத்தியக்காரன்" ஆரம்பம்.

2 பிரபல வட இந்திய நடிகர்களான சாஹு மோதக்கும் லீலா சிட்னிஸும் சென்னைக்கு விஜயம் செய்தனர்.

22 மேற்கு மத்ய பம்பாயில் உள்ள ஒரு பிலிம் கிடங்கில் தீப்பிடித்துக் கொண்டது.

23 ஸினிமாப் பாடகி—நடிகை வி. ஆர் தனத்தின் சகோதரி பேபி ராஜாமணியின் நாட்டிய அரங்கேற்றல் ஸ்ரீ டி. செங்கல்வராயன் முன்னிலையில் ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஊழியர் சங்கத்தினர் ஆயுத பூஜையை சிறப்பாய் கொண்டாடினர்.

4 சென்னையில் தயாரான கன்னட "கபீர்தாஸ்" பங்களூரில் முதன் முதலாகத் திரையிடப் பட்டது.

விடுதலைக்குப் பின் எம். கே. டி. பாகவதர் நடிக்கும் முதல் படமான "ராஜமுக்தி"யின் ஆரம்ப விழா புனு பிரபாத் ஸ்டுடியோவில் நடந்தது.

7 மயிலை வாலிபர் சங்கத்தின் லளித கலைப் பகுதியின் ஆரம்ப விழாவை சங்கீத கலாநிதி டி. எல். வெங்கடராமய்யர் நடத்தி வைத்தார்.

Printed by P. Arunachalam at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited & Published by P. R. S. Gopal (Gundoosi) at 246, Thambu Chetty Street, Madras. 1.

இந்தப் பால் வழியும் வதனம் (சோபனா சமர்த்) ஹிந்தி ராம் ராஜ்யாவில் ஸீதையாகத் தோன்றினார். இப்பொழுது அதே ஹிந்திப் படம்தான் தமிழ்ப் படமாக தீபா வளியன்று வெளிவந்திருக்கிறது.

தீபாவளியன்று வெளிவந்துள்ள
"கன்னிகா" தமிழ்ப் படத்தில்
தோன்றும் எம். எஸ். சரோஜினி



C. ஹொன்னப்ப பாகவதர்
B.R பந்துலு
K. சாரங்கபாணி
சாந்தகுமாரி
T.N. மீனாக்ஷி
K.R. செல்லம்
T.V. குமுதினி
and
V. நாகையா

ராகினியாரின்

பக்த ஜனா

Direction... **P. PULLAIAH** .... *Music*... **REMA & NARAYAN**

Dialogues...... **SOMAYAJULU** ...... *Songs*.. **RAJAGOPALAIER**

விநியோகஸ்தர்கள்

மைசூர் சமஸ்தானம்
கர்நாடக பில்ம்ஸ் லிமிடெட்,
பங்களூர்.

ஆந்திரா & விடப்பட்ட ஜில்லாக்கள்
வாஹினி பிக்சர்ஸ் லிமிடெட்,
பெஜவாடா.

மற்ற விவரங்களுக்கு

ராகினி பில்ம்ஸ்,
127 ராயப்பேட்டை ஹைரோடு, மைலாப்பூர், சென்னை.

GUNDOOSI
Regd. No. M. 4924
HAIRODINE
வசீகர வதனம்
வனப்பு
மிக்க கூந்தல்
ஹேரோடின்
ஜீவ சக்தி
வாய்ந்த கூந்தல்
தைலம்
CARNATIC CHEMICAL WORKS MADRAS
பிராஞ்சு: பெஹ்ராம்ஜி மேன்ஷன்ஸ் (முதல்மாடி), ஸர்.பி.எம். ரோடு, பம்பாய்
சென்னை ஏஜண்டுகள்: கோல்டுவின் & கோ, 50 பந்தர் தெரு, சென்னை
மதுரை ஏஜண்டு: ஜெனரல் கமர்ஷியல் ஏஜன்ஸி, கான்பாளையம் தெரு, மதுரை